# 2012

# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
## Annual Performance Report



අධ්‍යාපන අමාත්‍යාංශය    கல்வி அமைச்சு    Ministry of Education

# வருடாந்த செயற்சாதனை அறிக்கை - 2012

கல்வி அமைச்சு

**இவ் வருடாந்த அறிக்கை அரச நிதி சுற்றறிக்கை இல. 402 இன் 2.4 வாசகத்துக்கு அமைய கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்டது.**

**2013 ஆகஸ்ட்**


மேற்பார்வை மற்றும் செயற்சாதனை மீளாய்வுக் கிளை
கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல.

## கல்விச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி,

2012 ஆம் ஆண்டில் கல்வியின் பண்புசார் மற்றும் அளவீட்டு அபிவிருத்திக்காக அமுல்படுத்தப்பட்ட முழுமையான கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பான தகவல்களைக் கொண்ட கல்வி அமைச்சின் வருடாந்த செயற்சாதனை அறிக்கையினை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறேன்.

இலவசக் கல்வியின் ஊடாக பல வெற்றிகளைப் பெற்றுக்கொள்ள முடிந்த தேசமென்ற வகையில் அக்கல்விக் கொள்கையினைத் தொடர்ந்தும் பாதுகாத்து பண்புசார் விருத்தியினை துரிதமாக மற்றும் யதார்த்த பூர்வமான பிரவேசத்துடன் முன்னெடுப்பதே கல்வி அமைச்சின் பிரதான இலக்காக அமைந்துள்ளது. மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கின் புத்துயிரூட்டும் வேலைத்திட்டத்திற்கு இணைவாக 2012 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி வேலைத் திட்டங்களாக மஹிந்தோதய 1000 இடைநிலைப் பாடசாலைகள் மற்றும் அதனுடன் இணைந்த சிறுவர் நட்புறவு 5000 ஆரம்பப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தினைக் குறிப்பிட முடியும். உரிய இலக்காகக் கொள்ளப்பட்ட சகல பிள்ளை களுக்கும் சமமான மற்றும் பண்புசார் தரமிக்க உயரிய கல்வியினை வழங்கி கோளமய பிரஜைகளை உருவாக்குவதனை விரிவான நோக்காகக் கொண்டு அமுல்படுத்தப் பட்ட இவ்வேலைத்திட்டங்களுக்காக உள்நாட்டு நிதியினைப் போன்று வெளிநாட்டு நிதியினையும் முன்னணிப் பணியாக முதலீடு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி முகாமையாளர்கள் மற்றும் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள விரிவான ஆட்சேர்ப்பு மற்றும் தேவையின் அடிப்படையில் நிலைப்படுத்துவதனைப் போன்று அவர்களின் தொழில்சார் திறமைகளை மேம்படுத்துவது கல்வி அபிவிருத்தியின் போது முன்னணித் தேவையாக இனங்காண்பதும் அது தொடர்பில் முக்கியத்துவம் வாய்ந்த பல நடவடிக்கைகளும் இவ்வாண்டில் முன்னெடுக்கப்பட்டன.

பண்புசார் கல்வியினைப் போன்று சிறந்த நற்பிரஜைகளை உருவாக்குவதற்காக பாடசாலைகளைப் பலப்படுத்துவதனைப் போன்று கல்வி முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திப் பணிகள் பாடசாலைகளுக்க அண்மித்த நிறுவனங்களாக கோட்ட மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களில் உயரிய மட்டத்தில் பலப்படுத்துவதற்காகத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க கடந்த ஆண்டில் விசேடமாக கவனம் செலுத்தப்பட்ட பணிகளாகும்.

இவ்வாறான பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் ஊடாக பாடசாலைக் கல்வியின் முழுமையான பண்புசார் தரத்தினை மேம்படுத்தி இலங்கையை அறிவின் கேந்திர நிலையமாக மாற்றியமைப்பதற்காக எதிர்கால நோக்கினை எட்டுவதே எமது அபிலாசையாகும்.

**அனுர திசாநாயக்க,**
**செயலாளர்,**
**கல்வி அமைச்சு.**

## கல்வி அமைச்சின் பிரதான பிரிவுகள், பதவிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் (2012.12.31 ஆந் திகதியன்று)

### கல்வி அமைச்சர்

கௌரவ பந்துல குணவர்தன அவர்கள்

### பிரதி கல்வி அமைச்சர்

கௌரவ விஜித் விஜிதமுனி சொய்சா அவர்கள்

### மேற்பார்வை உறுப்பினர்

கௌரவ மொஹான்லால் ஹிரேரோ

### செயலாளர்

திரு. கோடபய ஜயரட்ண அவர்கள்

**திட்டமிடல் செயற்சாதனை அடைவு மட்ட மீளாய்வுப் பிரிவு**

மேலதிக செயலாளர் - திரு. எஸ்.யூ. விஜேரட்ண

**கல்வி பண்புசார் விருத்திப் பிரிவு**

மேலதிக செயலாளர் - திரு. எச்.யூ. பிரேமதிலக

**கல்விச் சேவைத் தாபனப் பிரிவு**

மேலதிக செயலாளர் - திரு. எச்.எம்.ஆர்.பீ. ஹேரத்

**பாடசாலை வழங்கல், சேவை மற்றும் நிர்மாணிப்புப் பிரிவு**

மேலதிக செயலாளர் - திரு. அனுர திசாநாயக்க

**நிதி மற்றும் நிர்வாகப் பிரிவு**

மேலதிக செயலாளர் - திரு. என்.எச்.எம். சித்ரானந்த

பிரதம கணக்காளர் - திரு. வீ.ஏ.கே. ஜயசிங்க

# உள்ளடக்கம்

## 1. கல்வி அமைச்சின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்


நோக்கு 1
பணிக்கூற்று 1
கல்வி அமைச்சின் பொறுப்புக்கள் 1
கல்வி அமைச்சின் செயற்பாட்டுப் பணிகள் 2
கல்வி அமைச்சுடன் இணைந்த நிறுவனங்கள் 2


## 2. தேசிய கல்வி அபிவிருத்தி இலக்கு மற்றும் வியூகத் திட்டங்கள் 2012 - 2016


2.1 தேசிய கல்வி அபிவிருத்தி இலக்கு 3
2.2 கல்வித் துறைசார் அபிவிருத்திக் கோட்பாடு மற்றும் வேலைத்திட்டங்கள் 2012 - 2016 3


## 3. ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியின் சம நியாயப் பிரவேசம் மற்றும் பங்கேற்பினை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகள்


3.1 1000 இடைநிலைப் பாடசாலைகள் மற்றும் 5000 ஆரம்பப் பாடசாலைகளை மீள் கட்டமைக்கும் தேசிய வேலைத்திட்டம் 5
3.2 கட்டாயக் கல்விக் கோவையினை அமுல்படுத்தல் 9
3.3 உள்ளீட்டுக் கல்வி 9
3.4 மாணவர் நலன்புரி வேலைத்திட்டம் 9
3.5 தேசிய பாடசாலை அபிவிருத்தி 9
3.6 விசேட அபிவிருத்தித் தேவைகள் கொண்ட பாடசாலைகளுக்கான வேலைத்திட்டங்கள் 10
3.7 பிரிவெனாக் கல்வி 11
3.8 முறைசாராக் கல்வி 11
3.9 விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளின் கல்வி 12


## 4. பாட மற்றும் பாட இணை வேலைத்திட்டங்களின் பண்புசார் தரத்தினை விருத்திசெய்தல்


4.1 ஆரம்பக் கல்வி 13
4.2 கணிதக் கல்வி 14
4.3 விஞ்ஞானக் கல்வி 15
4.4 தேசிய மொழிக் கல்வி 15
4.5 தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பக் கல்வி 16
4.6 ஆங்கில மொழிக் கல்வி 16
4.7 மானிட சாஸ்திரக் கல்வி 18
4.8 அழகியற் கல்வி 18
4.9 விவசாய மற்றும் சுற்றாடல் தொழில்நுட்பக் கல்வி 19
4.10 தொழிநுட்பக் கல்வி 19
4.11 வர்த்தக மற்றும் வாணிபக் கற்கை 20
4.12 உடற்கல்வி மற்றும் விளையாட்டுத் திறமைகளை விருத்தி செய்தல் 20
4.13 சமய மற்றும் விழுமியக் கல்வி 21
4.14 இரட்டை மொழிக் கல்வி 21
4.15 மும்மொழி இலங்கை வேலைத்திட்டம் 22
4.16 பாடசாலை நூலக அபிவிருத்தி 22
4.17 சுகாதார ஊக்குவிப்பு மற்றும் போசாக்கு வேலைத்திட்டங்கள் 23
4.18 சமூக நல்லிணக்கம் மற்றும் சமாதானக் கல்வி 25
4.19 மாணவர் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைச் சேவை 25

## 5. மனிதவள அபிவிருத்தி


5.1 இலங்கை ஆசிரியர் சேவை 27
5.2 இலங்கை அதிபர் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளல் 28
5.3 இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளல் 28
5.4 இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குச் சேர்த்துக்கொள்ளல் 28
5.5 பல்வேறுபட்ட பயிற்சி வேலைத்திட்டங்கள்


## 6. பௌதீகவள விருத்தி

## 7. பயன்மிக்க சேவைகளை வழங்குவதனைப் பலப்படுத்தல் மற்றும் செயற்சாதனை மதிப்பீடு


7.1 தேசிய கல்விக் கொள்கையினை அமுல்படுத்தல் மற்றும் மாகாண சபையுடன் இணைப்புக்களை மேற்கொள்ளல் 31
7.2 வெளிநாட்டு ஒத்துழைப்பு மற்றும் தனியார் துறையின் ஒத்துழைப்பின் மூலம் பண்புசார் பிரவேசத்தின் மீதான ஈடுபாடு 32
7.3 அமைச்சின் புதிய அபிவிருத்திப் பிரவேசம் 32
7.4 செயற்சாதனை மதிப்பீடுகள் 33


## 8. நிதி முதலீடு மற்றும் செலவினங்கள் தொடர்பான முன்னேற்றங்கள்


8.1 கல்வி அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் மீண்டெழும் செலவினங்களின் சுருக்கம் 35
8.2 கல்வி அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் மூலதனச் செலவினச் சுருக்கம் 36
8.3 பொதுக் கல்விக்கான மொத்தச் செலவினம் 36
8.4 கல்வி அபிவிருத்திக்கான வெளிநாட்டு உதவி மற்றும் முதலீடு 37
8.5 அறிவுசார் சமூகத்திற்கான கல்விச் செயற்றிட்டம் (ஆசிய அபிவிருத்தி வங்கி) - EKSP 38
8.6 அறிவுசார் பொருளாதாரத்திற்காக மானிட மூலதனத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடசாலை முறைமையினை மாற்றியமைத்தல் 39
8.7 புதிய மாதிரி ஆரம்பப் பாடசாலை அபிவிருத்திச் செயற்றிட்டம் (உள்நாட்டு நிதியம்) 40


## 9. பண்புசார் சுட்டியூடான செயற்சாதனையின் பகுப்பாய்வு


9.1 தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதான சுட்டிகள் ஊடான ஒப்பீடுகள் 41
9.2 பாடசாலை முறைமை 42
9.3 மாணவர் பிரவேசம் மற்றும் பங்கேற்பு 44
9.4 தகைமை மிக்க ஆசிரியர் பரம்பரை 45
9.5 மாணவர் அடைவுமட்டத்தை மேம்படுத்தல் 46
9.6 சர்வதேச விஞ்ஞான கணித ஒலிம்பியாட் வெற்றிகள் 48


## 10. அடிப்படை புள்ளிவிபரங்கள்

## இணைப்புக்கள்


**இணைப்பு 1 - பொதுக் கல்விப் பாடவிதானம் 53**
**இணைப்பு 2 - 2012 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் 54**
**இணைப்பு 3 : 2012.12.31 ஆந் திகதியன்று அமைச்சின் சிரேஷ்ட பதவிகளும் உத்தியோகத்தர்களும் 56**

# 1. கல்வி அமைச்சின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்

## நோக்கு

இலங்கையின் அடையாளத்தின் பங்களார்களாக திறமை வாய்ந்த பிரஜைகள் ஊடாக சர்வதேச சமூகத்தின் அதிசிறந்த நிலையை எட்டுதல்.

## பணிக்கூற்று

பங்காளர் தரப்பினை திருப்திப்படுத்தக் கூடியவாறான வினைத்திறன் மற்றும் உயர் பண்புசார் தரத்தின் ஊடாக கல்வியின் நவீன மயப்படுத்தப்பட்ட மற்றும் நவீன பிரவேசங்கள் ஊடாக சர்வதேச தரங்களுக்கு அமைவாக திறமை வாய்ந்த பிரஜைகளை உருவாக்குதல்.



## கல்வி அமைச்சின் பொறுப்புக்கள்

இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமிக்க தேசமாக மாற்றியமைக்கும் *மஹிந்த சிந்தனையின் எதிர்கால* நோக்கிற்கு அமைய புதியதோர் இலங்கையைக் கட்டியெழுப்பும் கொள்கைக் கோட்பாட்டின் கீழ் நீடித்த நிரந்தர அபிவிருத்திக்காக அரசினால் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கிடையே கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஆசியாவின் அறிவுக் கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றியமைக்கும் பாரிய செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்கும் பொறுப்பு கல்வி அமைச்சுக்கு உள்ளது.

அதி சிறந்தவற்றை எமது சிறார்களுக்கே வழங்க வேண்டும் என்ற சிந்தனையை யதார்த்த பூர்வமாக்குவதற்காக எதுவித பேதங்களும் இன்றி சகல பிள்ளைகளுக்கும் சமமான கல்வியினை வழங்குவதற்காக சகல சவால்களுக்கும் முகங்கொடுத்துப் பலமிக்கதாக புதிய அபிவிருத்திப் பிரவேசங்களுடன் பல வேலைத்திட்டங்ளை அமுல்படுத்த கல்வி அமைச்சு சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது.

இத்தேசிய கல்வி நோக்கினை எட்டுவதற்காக மாகாண சபைகளுடன் சிறந்த தொடர்பினைப் பேணி இலக்காகக் கொண்ட அபிவிருத்திக்காகத் தேவையான கட்டமைப்புக்களை முன்னெடுக்கும் பொறுப்பினை கல்வி அமைச்சு முறையாக நிறைவேற்றுகிறது.

## கல்வி அமைச்சின் செயற்பாட்டுப் பணிகள்

தேசிய கல்விக் கொள்கையினை வகுத்தல் மற்றும் நவீன மயப்படுத்துவது தொடர்பாக தேசிய கல்வி ஆணைக்குழுவுக்கு பரிந்துரைகள் உட்பட மீளூட்டல்களை வழங்கி கல்வியின் விரிவான நோக்கங்களுக்கு அமைய தேசிய கல்விக் கொள்கையின் வரைவிலக்கணம் மற்றும் பயன்பாடுகள்.

தேசிய நோக்கங்கள் மற்றும் கொள்கைகளுக்கு இணங்க கல்வியின் செயற்பாட்டுத் திட்டமிடல்கள், அமுல்படுத்தல், மேற்பார்வை, முன்னேற்றங்கள், மீளாய்வுகள் மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

கல்வி அபிவிருத்திக்காக இருதரப்பு மற்றும் பல்தரப்பு வெளிநாட்டு உறவினைப் பேணல், வலய மற்றும் சர்வதேச அமைப்புக்களுடனான ஒத்துழைப்புக்களையும் பேணல்.

பொதுக் கல்வியின் தரத்தினைத் தீர்மானித்தல் மற்றும் அத்தரங்களினைப் பேணுவதற்காகத் தேவையான செயற்பாடுகளை முன்னெடுத்தலும், பாடசாலை மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களின் ஆக்கத்திறன் செயற்பாடுகளை விருத்திசெய்தலும்.

பொதுக் கல்வி, ஆசிரிய கல்வி, விசேட கல்வி மற்றும் பிரிவெனாக் கல்விக்குரிய பாடவிதான விருத்தியின் அமுல்படுத்தல் மற்றும் மதிப்பீடுகள்.

கல்வி விருத்திக்காக ஆராய்ச்சித் துறையினை இனங்கண்டு ஆராய்ச்சிகளை நடாத்தல் மற்றும் அதன் பெறுபேறுகளை கல்விச் செயற்பாடுகளுக்காக பயன்மிக்கதாக மாற்றியமைத்தல்.

தேசிய மட்டத்திலான சான்றிதழ் பரீட்சை, பாடப் பரீட்சை மற்றும் பொது விவேகப் பரீட்சைகளுக்காக பொருத்தமான மதிப்பீட்டு முறைகளை முன்னெடுத்தலும் மீளாய்வுக்கு உட்படுத்தலும்.

பலம்பொருந்திய கல்விப் பண்புசார் செயற்பாடுகளுக்குத் தேவையான மனிதவள விருத்தி.

கல்வி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் தேசிய பாடசாலைகளின் முகாமைத்துவமும் செயற்சாதனை மதிப்பீடுகளும்.

கல்வி முகாமைத்துவம் மற்றும் வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பாக மாகாணக் கல்விப் பொறுப்பாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல், இணைப்புக்கள் மற்றும் மீளாய்வுகள்.

வெளிநாட்டு உதவி பெறும் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் மேற்பார்வைகள்.

கற்றல் உதவிக் கல்விக் கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களுக்கான மதிப்பீடுகள் உட்பட தரத்தினை உறுதிப்படுத்தலும், திட்டமிடல் அபிவிருத்திகளும்.

பாடநூல், சீருடைத் துணிகள் மற்றும் தேசிய மட்டத்தில் வழங்க வேண்டிய சேவைகள் உட்பட பொருட்களை வழங்குதல்.

கல்வி விடயத்துறையின் கீழ் சகல மூலதனச் செலவினங்களும் கல்வி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் மீண்டெழும் செலவினங்களையும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தலும், நிதி ஒதுக்கீடுகளை கிரமமாக நிதி முகாமைத்துவ முறைமையில் அமுல்படுத்தல்.

கல்வித்துறையின் கீழுள்ள சகல சேவைகளினதும் பிராமணக் குறிப்பு நிர்வாகச் செயற்பாடுகளுக்காக கல்வி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் சிறந்த உள்ளக நிர்வாகச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

## கல்வி அமைச்சுடன் இணைந்த நிறுவனங்கள்

- மாகாணக் கல்வித் திணைக்களம்
- கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
- இலங்கை பரீட்சைத் திணைக்களம்
- தேசிய கல்வி நிறுவகம்
- தேசிய நூலக மற்றும் சுவடிக் கூடச் சேவைச் சபை
- இலங்கை தேசிய நூலக அபிவிருத்திச் சபை
- இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுச் சபை

# 2. தேசிய கல்வி அபிவிருத்தி இலக்கு மற்றும் வியூகத் திட்டங்கள் 2012 - 2016

## 2.1 தேசிய கல்வி அபிவிருத்தி இலக்கு

மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு (2010) உட்பட அரச கொள்கை யோசனை மற்றும் பரிந்துரைகள் தேசிய கல்விக் கோட்பாட்டுக்கு இணங்க பலமுடன் கட்டியெழுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் சகலருக்கும் கல்வி மற்றும் மிலேனிய அபிவிருத்தி இலக்கு ஆகிய சர்வதேச கொள்கைகளுக்கு அமைய இலங்கையின் கல்விக் கொள்கைகளும் உள்ளடங்கியுள்ளன. தேசிய கல்விக் கொள்கைகள் மற்றும் அதனுடன் இணைந்த 11 அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டுள்ளதுடன் 2015 ஆம் ஆண்டளவில் அவ்விலக்கினை எட்டுவதனை நோக்காகக் கொண்டு பலம்பொருந்திய வியூகத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

1. கட்டாயக் கல்வி வயதில் உள்ள சகல பிள்ளைகளுக்காகவும் கல்விப் பிரவேசத்திற்கான சந்தர்ப்பத்தினை உறுதி செய்தல் மற்றும் க.பொ.த. (சா.த.) வரையான பங்கேற்பினை 85% தொடக்கம் 90% வரை அதிகரித்தல்.
2. மஹிந்தோதய 1000 இடைநிலைப் பாடசாலைகள் மற்றும் சிறுவர் நட்புறவுப் பிரவேசம் கொண்ட 5000 ஆரம்பப் பாடசாலைகளை மீள்கட்டமைத்தல்.
3. க.பொ.த. (சா.த.) சித்தியடைந்த விகிதாசாரத்தை 61% தொடக்கம் 75% வரை அதிகரித்தல்.
4. க.பொ.த. (உ.த.) சித்தியடைந்த விகிதாசாரம் விஞ்ஞாபனப் பாடவிதானம் 50% தொடக்கம் 53% வரை, வர்த்தகப் பாடவிதானம் 51% தொடக்கம் 60% வரை, கலைப் பாடவிதானம் 59% தொடக்கம் 63% வரை அதிகரித்தல்.
5. க.பொ.த. (உ.த.) பங்கேற்பு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பாடவிதானத்தை 21% தொடக்கம் 30% வரை, வர்த்தகப் பாடவிதானம் 21% தொடக்கம் 34% வரை, கலைப் பாடவிதானப் பாடவிதானங்களை பயன்மிக்கதாக பல்வகைப்படுத்தல்.
6. தொழில்சார் தகைமை கொண்ட ஆசிரியர் விகிதாசாரத்தை 81% தொடக்கம் 90% வரை அதிகரித்தல்.
7. மாணவர் தகவல் தொழில்நுட்ப அறிவினை 30% தொடக்கம் 60% வரை, தகவல் தொழில்நுட்பத் திறமை கொண்ட ஆசிரியர் எண்ணிக்கையினை 30% தொடக்கம் 65% வரை அதிகரித்தல்.
8. க.பொ.த. (சா.த.) மற்றும் (உ.த.) தொடர்ந்து பாடசாலையை விட்டு விலகிய 100,000 தொடக்கம் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) இற்கான அடிப்படையினைப் பாடசாலை மட்டத்தில் வழங்குதல்.
9. சமூக நல்லுறவினைக் கௌரவிக்கும் ஆசிரிய மாணவர்களை உருவாக்குவதனை அடிப்படையாகக் கொண்டு 9939 பாடசாலைகளில் மும்மொழிக் கற்கைக்கான சந்தர்ப்பத்தினை உறுதிப்படுத்தல்.
10. உயர் ஆளுமை மற்றும் உடற் தகைமை கொண்ட மாணவப் பரம்பரையினரை உருவாக்குவதனை அடிப்படையாகக் கொண்டு 9931 பாடசாலைகளிலும் விளையாட்டு அழகியல் பாடத்துடன் இணைந்த செயற்பாடுகளை விரிவுபடுத்தல்.
11. சகல கல்வி நிறுவனங்களிலும் விசேட தேவைகளை வழங்குவது தொடர்பாக தேசிய உற்பத்தித் திறன் தரத்தினை வழங்கும் நிறுவனமாக மாற்றியமைத்தல்.

## 2.2 கல்வித் துறைசார் அபிவிருத்திக் கோட்பாடு மற்றும் வேலைத்திட்டங்கள் 2012 - 2016

2012 - 2016 தேசிய கல்வி வியூகத் திட்டமிடலின் விசேட நோக்கமாக அமைந்திருப்பது எதிர்கால அறிவினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்துக்கு மற்றும் சமூகத்திற்குத் தேவையான மானிட மூலதனத்தின் அடிப்படையாக இலங்கையில் பாடசாலை முறைமையினைத் தயார்படுத்தலாகும்.

எனவே இவ்வுபாயத் திட்டமிடல் அறிவினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்துக்கு மற்றும் சமூகத்துக்குத் தேவையான மானிட மூலதனத்தினை அடிப்படையாகக் கொண்டதாக பாடசாலை முறைமையினை மாற்றியமைத்தல் என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

முழுமையாக நோக்கும் போது கல்வித் துறைசார் அபிவிருத்திக் கோட்பாடு மற்றும் வேலைத்திட்டங்கள் (2012 - 2016) கலவ்யின் பண்புசார் விருத்தியினை மேம்படுத்துவது பிரதான நோக்கமாகக் கொள்ளப் பட்டுள்ளது. இதன் போது எதிர்கால அறிவினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தில் காணப்படும் கேள்விகளுக்கு ஏற்றவாறு பாடவிதானத்தினை பல்வகைப்படுத்துவதன் மூலம் மாணவர்களின் அறிவு, திறமை மற்றும் பெறுமதியினை மேம்படுத்த உரிய வேலைத்திட்டங்கள், செயற்றிட்டங்களை அமுல்படுத்துவது நோக்கமாகும். 1, 5 தரங்களுக்காக ஆரம்பப் பருவம், இடைநிலைக் கல்வியினை அடிப்படையாகக் கொண்டதாகும். எனவே ஆரம்பக் கல்விக் கால எல்லைக்குள் சிறுபராயம் அமைதியான சுதந்திரமான காலம் என்பதனால் அத்தரங்களின் மாணவர்களிடம் பௌதீக, உள, சிந்தனை விருப்பு வெறுப்புக்கள் மற்றும் சமூகத் திறமைகளை விருத்தி செய்வது அவசியமாகும். (நிறைவேற்று சுருக்கம், தேசிய வியூகத் திட்டம், கல்வி அமைச்சு, 2012)

தேசிய உபாயங்கள் கல்வித் திட்டமிடலின் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு கொள்கை அடிப்படையிலான மூன்று தொனிப்பொருளின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

**தொனிப்பொருள் 1 :**
**ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்விக்கான சமநியாய கல்விப் பிரவேசம் மற்றும் பங்கேற்புக்கான சந்தர்ப்பத்தினை மேம்படுத்தல்.**

- இலவசக் கல்விக் கொள்கையினை தொடர்ச்சியாக முன்னெடுப்பதனை உறுதிப்படுத்தல்.
- ஆறு வயது தொடக்கம் 14 வரையான கட்டாயக் கல்வி வயதெல்லை 6 வருடங்கள் தொடக்கம் 16 வரை நீடிக்க ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியின் பண்புசார் தரம் மற்றும் பிரவேச சந்தர்ப்பங்கள் தொடர்பான முரண்பாடுகளைக் கட்டுப்படுத்தல்.
- பாடசாலை செல்ல வேண்டிய இருப்பினும் பாடசாலை செல்லாத மாணவர் எண்ணிக்கையினைக் குறைத்தல்.
- முறைசாராக் கல்வி வேலைத்திட்டங்களை விரிவுபடுத்தல்.
- முறைசார் மற்றும் முறைசாராக் கல்வி வேலைத்திட்டங்களைப் பலப்படுத்தல்.
- விசேட கல்வித் தேவைகள் கொண்ட மாணவர்களின் கல்வி உரிமையினை உறுதிப்படுத்தல்.
- பிரிவெனாக் கல்வியினைப் பலப்படுத்தல்.
- பாடசாலைகளில் பாதுகாப்பு மிகுந்த கற்றல் சூழலை உறுதிப்படுத்தல்.
- பாடசாலை சுகாதார மற்றும் போசாக்கு வேலைத்திட்டங்களைப் பலப்படுத்தல்.
- தற்போதைய கல்விக் கொள்கை மற்றும் கலாச்சார அடையாளங்களுக்கு ஏற்றவாறு பாடவிதானங்களை சமகாலப்படுத்தல்.
- பாடசாலை மட்டத்தில் ஆலோசனைச் சேவைகளை அமுல்படுத்தல்.
- பாதிப்புமிக்க பிரதேசங்களில் வாழும் மாணவர்களை மீளப் பாடசாலைக்கு அனுப்பும் வேலைத்திட்டங்கள், கைநழுவிய கற்கைச் சந்தர்ப்பங்களை மீள வழங்கத் தலையீடு செய்தல்.
- ஆரம்ப மற்றும் இடைநிலை சமநியாய கல்விப் பிரவேசங்கள் மற்றும் பங்கேற்பினை உறுதி செய்யக் கூடியவாறு வினைத்திறன் மிக்க 1000 இடைநிலைப் பாடசாலைகள் மற்றும் ஆரம்பப் பாடசாலைகள் கொண்டதாக பாடசாலை வலையமைப்பினை நிலைப்படுத்தல்.

**தொனிப்பொருள் 2 :**
**ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியின் பண்புசார் தரத்தினை மேம்படுத்தல்.**

- தேர்ச்சியினை அடிப்படையாகக் கொண்ட நியாய மற்றும் சமநிலைப் பாடவிதான பல்வகைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி.
- விஞ்ஞானக் கல்விக்கான சமநியாய இடைநிலைக் கல்வி வசதிகளை ஏற்படுத்தல்.
- வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மோதல்களினால் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களின் கல்வி அபிவிருத்தி.
- அடிப்படை வசதிகள் மற்றும் உயர் மட்டத்திலான கற்றல் வசதிகளை தேசிய ஒப்பளவுகளுக்கு அமைய சகல பாடசாலைகளுக்கும் வழங்குதல்.
- தாய்மொழி மூலம் கல்வி பெறுவதற்குள்ள உரிமையினை உறுதிப்படுத்தல் மற்றும் இரட்டை மொழிக் கல்விக்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தல்.
- சகல மாணவர்களுக்கும் விளையாட்டு வசதிகளை வழங்குதல்.
- க.பொ.த. (உ.த.) இற்காக தகைமை பெறும் மாணவர் எண்ணிக்கை விகிதாசாரத்தை மேம்படுத்தல் மற்றும் க.பொ.த. (உ.த.) விஞ்ஞான மற்றும் வர்த்தகப் பாடவிதானத்தினைக் கற்பிப்பதற்கான சந்தர்ப்பத்தினை விரிவுபடுத்தல்.
- மாணவர்களின் பாட அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்காக விசேட செயற்பாடுகளை அமுல்படுத்தல்.
- விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட சகல பாடங்களையும் கற்பிப்பதற்காக ஆசியர்களின் நிலைப்படுத்தலை விரிவுபடுத்தல் மற்றும் அப்பாடங்களைக் கற்பிப்பதற்கு நவீன தொழில்நுட்ப கற்றல் மற்றும் கற்பித்தல் உபகரணங்களை வழங்குதல்.
- ஆசிரியர்களின் தொழில்சார் தரம் மற்றும் கௌரவத்தினை மேம்படுத்தல்.
- மாணவர் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைச் சேவைச் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்.
- சமூக நல்லிணக்க மற்றும் சமய கூட்டுச் செயற்பாடுகளை பாடசாலைகளின் ஊடாக விருத்தி செய்தல்.
- விழுமியக் கல்வி மற்றும் மானிட உரிமைகளை பாடசாலைப் பாடவிதானத்தில் உள்ளடக்குதல்.
- மதிப்பீடு, மேற்பார்வை உட்பட பரீட்சை முறைகளை நவீனமயப்படுத்தல்.
- பாடசாலைப் பாடநூல் பாட உள்ளடக்கத்தின் பண்புசார் தரத்தினை மேம்படுத்தல்.

**தொனிப்பொருள் 3 : கல்வியின் சிறந்த நிர்வாகம் மற்றும் சேவை வழங்கலைப் பலப்படுத்தல்.**

- பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட திட்டமிடல் மற்றும் பாடசாலைகளைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களைப் பலமுடன் அமுல்படுத்தல்.
- சகல ஆரம்பப் பாடசாலைகளிலும் சிறுவர் நட்புறவு பாடசாலைப் பிரவேசங்களைப் பலப்படுத்தல்.
- முகாமைத்துவ மற்றும் நிதித் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரங்களை பாடசாலைகளுக்கு வழங்குதல்.
- அதிபர்கள் மற்றும் கல்வி உத்தியோகத்தர்களின் தொழில்சார் தரத்தினை மேம்படுத்தல்.
- அதிபர் பயிற்சி அகடமியினைத் தாபித்தல்.
- வலயக் கல்வி அலுவலகம், கல்வி முகாமைத்துவ அலகாகக் கோட்டக் கல்வி அலுவலகம், கல்வி உதவி மற்றும் துணைப் பிரிவுகளாகப் பலப்படுத்தல்.

**அடிப்படைத் தொனிப்பொருள் : கல்வி துறைசார் அபிவிருத்திச் சீர்திருத்தத் திட்டங்கள்**

- பொருளாதார விஞ்ஞான சமநியாயம் மற்றும் வினைத்திறனை உறுதி செய்யும் வகையில் வளப் பிரயோகம், நிதியாக்கம் மற்றும் திட்டமிடல்.
- பொதுக் கல்வித் துறையில் கல்வித் திட்டமிடல், வரவு செலவு, ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டுக் கலாச்சாரத்தினைப் பலப்படுத்தல்.
- கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமையினைப் பலப்படுத்தல்.
- தேசிய மதிப்பீட்டு முறைமையினை இலங்கையில் தாபித்தல் மற்றும் அதன் மூலம் தெரியவரும் தகவல்களை கல்வித் திட்டமிடலில் பயன்படுத்தல்.

**கிடைச் செயற்பாடுகள்**

பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டுக் கோட்பாடுகளைப் பலமுடன் அமுல்படுத்தல்.

முழுமையாக இந்நடுத்தர கால வேலைத்திட்டம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரதேச அபிவிருத்தியினைத் தாண்டி அமுல்படுத்தப்பட்டுள்ளது. பிரதேச ரீதியில் அறிவு மற்றும் திறமை மிக்க சமூகத்தினை உருவாக்குவதற்காக சமூகப் பொருளாதார விரிசலினை நிவர்த்தி செய்து அதனை பங்காளிகளாக்க வேண்டியுள்ளது. அத்துடன் இலங்கையில் வறுமையினை ஒழிக்க உதவுவதும், நடுத்தர வருமானம் பெறும் நாடாக இலங்கையின் நிலைப்பாட்டினை உறுதிப்படுத்த உதவுவதும் இவ்வேலைத்திட்டத்தின் நீண்டகால எதிர்பார்ப்பாகும்.

# 3. ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியின் சம நியாயப் பிரவேசம் மற்றும் பங்கேற்பினை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகள்

## 3.1 1000 இடைநிலைப் பாடசாலைகள் மற்றும் 5000 ஆரம்பப் பாடசாலைகளை மீள் கட்டமைக்கும் தேசிய வேலைத்திட்டம்

கல்வி அமைச்சின் 2012 - 2016 வரையான இடைக்கால அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பிரதானமாக கல்வி அபிவிருத்திச் செயற்பாடாக அமைந்திருப்பது 1000 இடைநிலைப் பாடசாலைகள் மற்றும் 5000 ஆரம்பப் பாடசாலைகளை மீள் கட்டமைக்கும் தேசிய வேலைத்திட்டத்தை அமுல்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை 2012 ஆம் ஆண்டில் பெற்ற பாரிய வெற்றியாகும்.

பிரதேச ரீதியில் கல்விக்கான சந்தர்ப்பங்கள் தொடர்பாகக் காணப்படும் முரண்பாடுகள், வளப்பகிர்வின் சமமின்மை, குறை அடைவு மட்டம், மாணவர் சனத்தொகையில் நகரமயமாக்கல் மற்றும் மாணவர்களின் சுகாதாரம் உட்பட போசாக்குப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு குறைபாடுகளுக்காக பிரயோகத் தீர்வுகளை எட்ட இவ்வேலைத்திட்டங்களின் மூலம் விரிவான அடிப்படைச் செயற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

இலங்கையை எதிர்கால அறிவுக் கேந்திரமாக்குவதற்குத் தேவையான மானிட மூலதன அடிப்படையினை உருவாக்குவதற்குத் தேவையான பண்பு கொண்ட கல்விக்கான சந்தர்ப்பத்தினை சமநியாயமாக மாணவர்களுக்கு வழங்கும் விரிவான எதிர்பார்ப்புடன் இவ்வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

### 3.1.1 வேலைத்திட்டத்தின் எதிர்பார்ப்பு மற்றும் நோக்கம்

- பிரதேச மற்றும் நிறுவன ரீதியில் காணப்படும் வள முரண்பாடுகளைக் குறைத்து சகல சிறார்களுக்கும் கல்விக்கான சம சந்தர்ப்பத்தினை வழங்குவதனை உறுதிப்படுத்தல்.
- மூடிவிடக் கூடிய நிலையில் உள்ள கஷ்ட மற்றும் பின்னடைந்த பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் தொடர்பில் விசேட கவனத்தினைச் செலுத்துவதற்காக கல்வி வளத்தின் பயன்பாட்டினை மேம்படுத்தல் மற்றும் அதன் மூலம் பொருளாதார சமூகப் பயன்களை மேம்படுத்தல்.
- நிர்வாகம், முகாமைத்துவ போதனாவியல் வேலைத்திட்டங்களை உயர் மட்டத்திற்கு மேம்படுத்துவதன் மூலம் உயரிய பண்புசார் தரம் கொண்ட விருப்பமான கற்கை அனுபவம் கொண்ட கற்பதற்கான சந்தர்ப்பத்தினை உறுதிப்படுத்தல்.
- சகல பாடங்கள் மற்றும் பாடவிதானங்களைக் கற்பதற்காக கல்விப் பிரவேச சந்தர்ப்பத்தினைத் தாபித்தல் மற்றும் விரிவுபடுத்தல்.
- தேசிய மற்றும் சர்வதேச ஊழிய சந்தையின் கேள்விக்கு ஏற்றவாறு திறமைமிக்க இளம் பிரஜைகளை உருவாக்குதல்.
- கலைத் திறமையினைப் போன்று தொடர்புசாதனத் திறமை, தலைமைத்துவத் திறமை, வர்த்தக ரீதியிலான பழக்கங்கள் போன்ற திறமைகள் மிக்க மாணவர் பரம்பரையினரை உருவாக்குதல்.
- நேர் மனப்பாங்கின் மூலம் அதிசிறந்த மானிடப் பண்புகள் கொண்ட தேகாரோக்கியம் மிக்க சுகாதார வளமிக்க சந்ததியினரை உருவாக்குவதற்காகத் தேவையான அடிப்படையினை வழங்குதல்.
- நுட்பமான திறமைகளை மேம்படுத்தல் மற்றும் விருத்தி செய்வதற்கான விசேட வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்.
- பாடசாலைகளில் பலம்பொருந்திய முகாமைத்துவம் கொண்ட சிறந்த சமூகத் தொடர்புகள் மிக்க பயன்மிக்க நிறுவனங்களாக அபிவிருத்தி செய்தல்.

### 3.1.2 வேலைத்திட்டத்தின் பிரதான உள்ளீடுகள்

1. கல்வியின் பண்புசார் விருத்திக்கான முன்னுரிமை

- க.பொ.த. (சா.த.) மற்றும் க.பொ.த. (உ.த.) மாணவர் அடைவு மட்டத்தினை மேம்படுத்தும் வேலைத்திட்டங்கள்.
- க.பொ.த. (உ.த.) விஞ்ஞானக் கல்விப் பாடவிதானத்தினை சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் குறைந்தபட்சம் மூன்று பாடசாலைகளிலேனும் ஆரம்பித்தல்.
- கணிதம், தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிக் கற்பித்தல் முறையினை விருத்தி செய்தலும், வசதிகளை வழங்குதலும்.
- விளையாட்டு அழகியல் மற்றும் பாட இணைத் துறையில் ஈடுபடப் பிள்ளைகளை ஊக்குவித்தல்.
- தேசிய பரீட்சைகளைப் பூர்த்தி செய்து பாடசாலையில் இருந்து வெளியேறும் பிள்ளைகளுக்கு அடிப்படைத் தேர்ச்சிச் சான்றிதழ்களை வழங்கி தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சியினை வழங்குதல்.

2. மானிட, பௌதீக, உட்கட்டமைப்பு மற்றும் நிதி வளம் வழங்கும் செயற்பாட்டு அபிவிருத்திகள்

- மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடத்தின் மூலம் கணிதம், தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிக் கற்பித்தலுக்கான நவீன வசதிகளை வழங்குல்.
- தேவையானவாறு பயிற்சி பெற்ற ஆசிரியர்களை வழங்குதல் மற்றும் ஆசிரியர் பயிற்சி.

3. சிறந்த நிர்வாகம் மற்றும் சேவை வழங்கலை அமுல்படுத்துவன் முன்னிலைப் பணிகள்

- திறமை மிக்க ஆக்கத்திறன் கொண்ட அதிபர்களை நியமித்தல் மற்றும் உயர் முகாமைத்துவப் பயிற்சியினை அவர்களுக்கு வழங்குதல்.
- பொருத்தமானவாறு பாடசாலைகளுக்கு நிதி மற்றும் முகாமைத்துவ அதிகாரங்களை வழங்குதல்.

### 3.1.3 இடைநிலைப் பாடசாலைகள் மற்றும் ஆரம்பப் பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்தல்

ஒப்பளவு ரீதியிலான அடிப்படை முறைகளின் கீழ் பாடசாலை வரைபு ரீதியிலான அப்பியாசங்கள் மூலம் பிரதேசத்தில் அதி சிறந்த இடைநிலைப் பாடசாலை மற்றும் அதற்கு அண்மித்த ஊட்டல் பாடசாலை கொண்ட பாடசாலை வலையமைப்பினை உள்ளடக்கக் கூடியவாறு பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. விசேடமாக மாகாண மட்டத்தில் தலையீடுகள் கொண்ட சகல தரப்பினர்களினதும் இணக்கங்களுக்கு அமைய இப்பாடசாலைகளைத் தேர்ந்தெடுப்பதன் பிரச்சினைகள் குறைந்த மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கமைய 2012 - 2013 ஆம் ஆண்டுக்காக முன்னிலையுடன் 632 இடைநிலைப் பாடசாலைகளும், அதனுடன் இணைந்த 2000 ஆரம்ப ஊட்டல் பாடசாலைகளும் அபிவிருத்தி செய்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டன.

### 3.1.4 1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதன் முன்னேற்றங்கள்

#### i மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடத்தை நிர்மாணித்தல்

மஹிந்தோதய இரண்டு ஆய்வுகூடங்கள் இரத்மலானை கொத்தலாவபுர கல்லூரியில் மற்றும் பிட்டிபன மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியில் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்து மாணவர்களிடம் ஒப்படைத்து அம்மாதிரிக்கு அமைய 2012 ஆம் ஆண்டுக்குள் மேலும் 409 கல்லூரிகளில் மஹிந்தோதய விஞ்ஞான ஆய்வுகூடங்களை நிர்மாணிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடம்**

- **சகல வசதிகளும் கொண்ட கணினிப் பிரிவு**
- **கணித ஆய்வுகூடம்**
- **மொழியியல் ஆய்கூடம்**
- **நனச தொலைக்கல்விப் பிரிவு**

3.1.1 அட்டவணை : முதலாம் கட்டத்தின் கீழ் (2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட) நிர்மாணிக்கப்பட்ட மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடங்களின் எண்ணிக்கை மற்றும் நேரடியாகப் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை

| மாகாணம் | அபிவிருத்தி செய்யப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை | பயன்பெறும் மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|
| மேற்கு | 41 | 35,060 |
| மத்தி | 25 | 20,660 |
| தெற்கு | 46 | 34,087 |
| வடக்கு | 28 | 9,739 |
| வடமத்தி | 27 | 32,452 |
| வடமேல் | 68 | 36,478 |
| சப்ரகமுவ | 61 | 37,445 |
| கிழக்கு | 72 | 54,031 |
| ஊவா | 41 | 31,359 |
| மொத்தம் | 409 | 282,311 |

#### ii மானிட வள விநியோகம் மற்றும் ஆசிரிய அபிவிருத்தி

நேரடியாக 1000 இடைநிலைப் பாடசாலைகளை இலக்காகக் கொண்ட தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம், விஞ்ஞானம், மற்றும் கணித புதிய பட்டதாரி 3000 ஆசிரியர்கள் பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு சேர்த்துக் கொள்வதனை இலக்காகக் கொண்டு கீழ்க்குறிப்பிட்ட எண்ணிக்கையில் 2012 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

- தகவல் தொழில்நுட்பப் பட்டதாரிகள் - 922
- விஞ்ஞானப் பட்டதாரிகள் - 485
- கணிதப் பட்டதாரிகள - 488
- ஆங்கிலப் பட்டதாரிகள - 201

#### iii அதிபர்களை நியமித்தல்

இவ்விடைநிலைப் பாடசாலைகளுக்காக முகாமைத்துவத் திறமைகள் மிக்க சிறந்த அதிபர் குழாமினை உருவாக்க எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் முதற்கட்ட நடவடிக்கையாக 69 அதிபர்களுக்கு 5 நாள் ஆரம்பப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

#### iv பாடசாலை அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதி வழங்கல்களை வழங்குதல்

1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் 405 பாடசாலைகளுக்காக கல்வித் துறைசார் அபிவிருத்திப் பிரவேசக் கோட்பாடு (TSEP) வேலைத்திட்டத்தின் மூலம் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக ஒரு பாடசாலை 500,000 ரூபா நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது.








இரத்மலானை கொத்தலாவலபுர கல்லூரியின் மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடத்தைத் திறத்தல்



ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியின் மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடத்தைத் திறத்தல்




மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடத்தைத்தின் சகல வசதிகளும் கொண்ட கணினி ஆய்வுகூடம்



கணிதப் பாடத்தினை விருப்புடன் கற்பதற்கான கணித ஆய்வுகூடம்





யாழ் ஸ்கந்தவரோதய கல்லூரி அபிவிருத்தி செய்யப்படுவதற்கு முன்னரும் மற்றும் EKSP செயற்றிட்டத்தின் ஊடாக அபிவிருத்தி செய்யப்பட்டதன் பின்னரும்.





கற்பிட்டி மாம்புரே கல்லூரி அபிவிருத்தி செய்யப்படுவதற்கு முன்னரும் மற்றும் EKSP செயற்றிட்டத்தின் ஊடாக அபிவிருத்தி செய்யப்பட்டதன் பின்னரும்.

### v ஆசிரிய அபிவிருத்தி வங்கிச் செயற்றிட்டம் (EKSP) இன் கீழ் 104 இடைநிலைப் பாடசாலைகளை 1000 இடைநிலைப் பாடசாலை வேலைத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்தல்

நாட்டின் 1400 பாடசாலைகளுக்கு அத்தியவசிய பழுதுபார்ப்புப் பணிகள் மற்றும் பௌதீக வள விருத்திச் செயற்பாடுகளுக்காக முதலீடுகளை மேற்கொள்வதற்காக ரூபா 100,000 வீதம் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட நிதி வழங்கல்கள் வழங்கப்பட்டன. இதன் விசேட அம்சமாகக் காணப்பட்டதுடன் இந்நிதி வளத்தினை முதலீடு செய்யத் தீர்மானித்தல், திட்டங்களை வகுத்தல் மற்றும் அத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக முழுமையாக பாடசாலைக்கு அதிகாரத்தினை வழங்கி மிகுந்த திருப்திகரமான செயற்பாடுகள் மற்றும் பின்னணிகளை வகுக்கப்பட்டிருந்தமையாகும்.

செயற்றிட்ட முதலீட்டின் கீழ் 50 பாடசாலைகளில் க.பொ.த. (உ.த.) விஞ்ஞானப் பாடவிதானத்துக்காக சகல வசதிகளும் கொண்ட மூன்று விஞ்ஞான ஆய்வுகூடங்கள் ரூபா 2000 மில்லியன் முதலீட்டினைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்யப்பட்டன. 32 பாடசாலைகள் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

**3.1.2 அட்டவணை : செயற்றிட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள இடைநிலைப் பாடசாலைகளின் எண்ணயிக்கை**

| மாகாணம் | பாடசாலை எண்ணிக்கை |
|---|---|
| மேற்கு | 14 |
| மத்தி | 12 |
| தெற்கு | 12 |
| வடக்கு | 17 |
| வடமத்தி | 11 |
| வடமேல் | 8 |
| சப்ரகமுவ | 8 |
| கிழக்கு | 8 |
| ஊவா | 10 |
| இலங்கை | **100** |

50 பாடசாலைகள் உட்பட செயற்றிட்டத்தின் மூலம் பண்புசார் அபிவிருத்தி மேற்கொள்வதற்கு ஆரம்பிக்கப்பட்ட 100 இடைநிலைப் பாடசாலைகளின் அபிவிருத்தி முன்னேற்றங்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட வரைபுகள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளன.

3.1.1 வரைபு




3.1.2 வரைபு




### 3.1.5 5000 ஆரம்பப் பாடசாலைகளை சிறுவர் நட்புறவுப் பிரவேசத்திற்கு அமைய அபிவிருத்தி செய்தல்

1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு இணைவாக அப்பாடசாலைகள் வலையமைப்பில் இணையக் கூடியவாறு இனங்காணப்பட்ட 5000 ஆரம்ப ஊட்டல் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் கல்வி அமைச்சின் பிரதான வேலைத்திட்டம் 2012 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டது. பிள்ளைகளின் ஆரம்பப் பருவத்தில் கல்வி மற்றும் சிறுவர் விருத்தியினை அத்தியவசிய முக்கியத்துவம் வாய்ந்த நோக்காகக் கருதி அதற்குப் பொருத்தமான கற்றல் கற்பித்தல் சந்தர்ப்பத்தினை வழங்கி அதிசிறந்ததாக 5000 பாடசாலை வலையமைப்பின் ஊடாக மிகுந்த விருப்பமிக்க பாதுகாப்பு மிகுந்த சிறுவர் நட்புறவுப் பாடசாலைகளாக இப்பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

2012 ஆம் ஆண்டில் 1680 பாடசாலைகள் சிறுவர் நட்புறவுப் பாடசாலைகளாக அபிவிருத்தி செய்வதற்காக பொருளாதார விவகார அமைச்சின் பங்களிப்புப் பெறப்பட்டதுடன் இதற்கமைய சகல ஆரம்பப் பாடசாலைகளுக்காகவும் 500,000 ரூபா வீதம் நிதி வழங்கல் பாடசாலை மட்டத்துக்கு வழங்கி சுத்திகரிப்பு வசதிகள், குடிநீர் வசதிகள், பாடசாலைகளை அழகுபடுத்துதல் உட்பட முழுமையான பாடசாலைச் சூழலை அபிவிருத்தி செய்வதற்காக முதலீடுகளை மேற்கொள்ளும் இயலுமை பாடசாலைக்கு வழங்கப்பட்டது.

சிறுவர் நட்புறவுப் பாடசாலை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மாகாண சபையுடன் இணைந்த தேர்ந்தெடுக்கப்பட்ட 25 பாடசாலைகள் மாதிரி வேலைத்திட்டம் ஜனாதிபதி அலுவலகத்துடன் இணைந்து அமுல்படுத்தப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டங்களுக்காக அமைச்சு மட்டத்தில் பல்துறைசார் பங்களிப்புக்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**3.1.3 அட்டவணை : 2012 ஆம் ஆண்டுக்குள் அபிவிருத்தி செய்யப்பட்ட ஆரம்பப் பாடசாலைகளின் எண்ணிக்கை**

| மாகாணம் | பாடசாலை எண்ணிக்கை |
|---|---|
| மேற்கு | 370 |
| மத்தி | 161 |
| தெற்கு | 178 |
| வடக்கு | 232 |
| வடமத்தி | 152 |
| வடமேல் | 129 |
| சப்ரகமுவ | 97 |
| கிழக்கு | 184 |
| ஊவா | 177 |
| மொத்தம் | 1680 |





*சிறுவர் நட்புறவுச் செயற்பாடுகளுக்கான கற்கைச் சூழல்............*

## 3.2 கட்டாயக் கல்விக் கோவையினை அமுல்படுத்தல்

தற்போது 5-14 வயதிற்கிடையில் காணப்படும் கட்டாயக் கல்வி வயதெல்லையினை 5-16 ஆக நீடிப்பதற்குத் தேவையான சட்ட ரீதியான கோவைகளை வகுக்கும் நடவடிக்கைகள் எக்கப்பட்டுள்ளன. இதற்கமைய சகல பிள்ளைகளும் குறைந்தபட்சம் 11ம் தரம் வரை பாடசாலையில் தங்கியிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதுடன் சிறுவர்களை பணியில் அமர்த்தும் அபாயத்தினைத் தடுக்கவும் நடவடிக்கை எடுத்தல்.

## 3.3 உள்ளீட்டுக் கல்வி

சகலருக்கும் கல்வி நோக்கினை எட்டும் பிரவேசமாக உள்ளீட்டுக் கல்வி வரை சகல பிள்ளைகளும் பொருத்தமான கற்றல் முறைகளை வகுப்பறையில் தாபித்தல், பாடசாலை முறைமையினை விருத்தி செய்தல் மற்றும் பலப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஆசிரியர்களுக்காக உள்ளீட்டுக் கல்வி உபகரணத் தொகுதிகள் தயாரிக்கப்பட்டு அதன் பிரதிகள் 20435 வகுப்பறைகளின் பயன்பாட்டுக்காக விநியோகிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இலத்திரனியல் கற்கைப் பொதியினை அபிவிருத்தி செய்தல் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட 13 ஆசிரிய மத்திய நிலையங்களில் அதன் முன்னோடி வேலைத்திட்டங்களை நடாத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

சகலருக்கும் கல்வி தசாப்தத்தின் இறுதி மதிப்பீட்டு அறிக்கை (2005 - 2010) தயாரிப்பதன் மூலம் இலங்கை பெற்றுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக பகுப்பாய்வுகளை மேற்கொள்ள மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பான பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3.4 மாணவர் நலன்புரி வேலைத்திட்டம்

- **இலவசப் பாடநூல் விநியோகம்**

சகல அரச மற்றும் அரசினால் உதவி பெறும் தனியார் பாடசாலைகளிலும் பிரிவெனாக்களிலும் கல்வி பயிலும் 41 இலட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு 1ம் தரத்தில் இருந்து 11ம் தரம் வரையாக பாடவிதானத்துக்குரியதான 437 பாடநூல்கள் அரசினால் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.

**3.4.1 அட்டவணை : மாணவர் நலன்புரி வேலைத்திட்டங்கள்**

| வேலைத்திட்டங்கள் | முதலீடு ரூபா | | | |
|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012 |
| பாடநூல் | 2,196 | 2,200 | 2,329 | 2,400 |
| போசாக்கு வேலைத்திட்டங்கள் | 2,251 | 2,382 | 2,800 | 2,850 |
| சீருடைத் துணிகள் | 1,260 | 949 | 1,363 | 2,214 |
| புலமைப்பரில்கள் | 260 | 200 | 294 | 240 |
| **மொத்தம்** | **5,967** | **5,731** | **6,786** | **7,704** |

- **இலவச சீருடைத் துணி விநியோகம்**

சகல அரச மற்றும் அரச உதவி பெறும் தனியார் பாடசாலைகள், பிரிவெனாக்களின் மாணவர்கள் 40 இலட்சம் பேர்களுக்குத் தேவையான சீருடைத் துணி 65 இலட்சம் பைக்கற்றுக்கள் விநியோகிக்கப்பட்டன. 2012 பாடசாலை சீருடைத் துணி விநியோகத் தேசிய விழா 2012.12.04 ஆந் திகதி பொலனறுவை றோயல் கல்லூரியில் இடம்பெற்றது.

- **புலமைப்பரிசில் வழங்கல்**

ஐந்தாம் தரத்தின் புலமைப்பரிசில் பரீட்சையில் கூடுதலான அடைவுமட்டம் காண்பிக்கப்படும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பாடசாலைக் கல்வி நிறைவடையும் வரை புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டில் இவ்வாறு புலமைப்பரிசில் வழங்கப்படும் மொத்த மாணவர் எண்ணிக்கை சுமார் 85,000 ஐ அண்மித்ததாகும்.

- **மதிய உணவு மற்றும் பசும்பால் வழங்கல்**

நாடு பூராகவும் 7625 பாடசாலைகளில் பத்த இலட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக மதிய உணவு மற்றும் 1446 பாடசாலைகளில் மூன்று இலட்சம்

## 3.5 தேசிய பாடசாலை அபிவிருத்தி

நாடு பூராகவும் விரிவடைந்துள்ள 342 தேசிய பாடசாலை வலையமைப்பு நேரடியாக கல்வி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றது. தேசிய பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதி விருத்தி, பௌதீக வள விருத்தி, மானிட வள விருத்தி, கல்வி அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்றன.

2012 வருடாந்த செயற்சாதனை

- க.பொ.த. (சா.த.) மற்றும் (உ.த.) பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்
- உயர் பெறுபேறுகளைப் பெற்ற பிள்ளைகளைக் கௌரவித்தல்

- ரூபா 10 மில்லியன் ஒதுக்கீடு 342 தேசிய பாடசாலைகளுக்கு வழங்குதல்
- மாற/ தெனியாய தேசிய பாடசாலைக்கு கூட்ட மண்டப கதிரையினை வழங்குதல்.
- 64 தேசிய பாடசாலைகளுக்காக வதிவிடம், மனை உபகரணங்களைக் கொள்வனவு செய்ய ஒதுக்கீடுகளை வழங்குதல்
- தேசிய பாடசாலை அதிபர்களின் திறமையினை விருத்தி செய்வதற்காக இரு நாள் வதிவிடப் பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல்.

## 3.6 விசேட அபிவிருத்தித் தேவைகள் கொண்ட பாடசாலைகளுக்கான வேலைத்திட்டங்கள்

### 3.6.1. சிறிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள்

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் 50 பிள்ளைகளை விடக் குறைந்த சிறிய பாடசாலைகளுக்கு முன்னுரிமையுடன் இனங்காணப்பட்ட விசேட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டதுடன் இதற்காக ஜனாதிபதி அலுவலகத்தின் அனுசரணையும் வழங்கப்பட்டது. இவ்வாறான 1590 பாடசாலைகள் இவ்வேலைத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டன.

இவ் வேலைத்திட்டத்திற்காக கல்வி அமைச்சு, மாகாண கல்வி அமைச்சு மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, தொலைத்தொடர்பு மற்றும் ஒழுங்காக்கல் ஆணைக்குழுச் சபை, இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் உட்பட தனியார் நிறுவனங்களின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்வதற்கான வியூக பிரவேசங்கள் அமுல்படுத்தப்பட்டன.

கீழ்க்குறிப்பிடப்பட்ட அபிவிருத்திப் பிரவேசங்கள் இப்பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

- தேவையான சுத்திகரிப்பு வசதிகளைப் பூரணப்படுத்தல்
- சுத்திகரிப்பு வசதித் தேவைகளைப் பூர்த்திசெய்தல்
- ஆரம்பப் பாடசாலைகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்
- கணினித் தொழில்நுட்ப வசதிகள் கொண்ட நவீன ஆரம்பத் தொழில்நுட்பக் கருவிகளை வழங்குதல்
- ஆசிரிய தேவைகளைப் பூரணப்படுத்தல்.

### 3.6.2. தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தி

பாதகமான சூழலில் வாழும் சிறார்களின் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதற்காக அரசினால் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு இடையே தோட்டப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வது பிரதான பணியாகும். தோட்டப் பாடசாலைகளின் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியின் பண்புசார் தரத்தினை விருத்தி செய்தல், விஞ்ஞான, கணித மற்றும் ஆங்கிலப் பாடங்களின் அறிவு விருத்தியினை நோக்காகக் கொண்டு 2012 ஆம் ஆண்டில் கீழ்க்குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

- ஆரம்பக் கல்விக்கான கற்கை உபகரணங்களைத் தயாரிக்கும் பல்தள கற்கை உபகரணங்களைத் தயாரிக்கும் இரண்டு செயலமர்வுகளை மத்திய மாகாணத்தில் நடாத்துதல்
- பல்தள கற்கை முறைகள் தொடர்பான இரு செயலமர்வுகள் மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பெறுபேறுகளை விருத்தி செய்வதற்கான மூன்று ஆசிரிய செலமர்வுகளை ஊவா மாகாணத்தில் நடாத்துதல்.
- க.பொ.த. (சா.த.) பெறுபேறுகளை விருத்தி செய்யும் மாணவர் அடைவுமட்டம் மற்றும் ஆசிரியர் பயிற்சி வேலைத்திட்டங்களை தெற்கு, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் நடாத்துதல்.

### 3.6.3. தமிழ் மொழிமூலப் பாடசாலை அபிவிருத்தி

தமிழ் மொழி மூலம் கற்கும் மாணவர்களுக்கு கல்வியின் சம வாய்ப்பினை வழங்கும் நோக்குடன் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் பௌதீக மற்றும் மானிட வளத்தினை நிவர்த்தி செய்வதற்காகவும் கற்றல் உபகரணங்களை விருத்தி செய்வதற்காகவும் கீழ்க்குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்கள் 2012 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டன.

- மன்னார் மற்றும் மூதூர் வலயங்களின் அதிபர்களுக்காக பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திச் செயற்பாடுகளை அறிமுகப்படுத்தல்.
- 20 பாடசாலைகள் மாணவத் தலைவர்களின் இரு நாள் தலைமைத்துவப் பயிற்சியில் பங்கேற்றல்.
- வட மாகாணத்தின் 20 தமிழ் மொழி மூலப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல்.
- மடு கல்வி வலயத்திற்குரிய 46 பாடசாலைகளும், வவுனியா வடக்கில் 85 பாடசாலைகளும் ஒரு பாடசாலைக்கு 30 புத்தகங்கள் வீதம் நூலகப் புத்தகங்களை வழங்குதல்.
- பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்கு தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் விஞ்ஞானம், கணிதம், ஆங்கில ஆசிரிய பற்றாக்குறைகள் தொடர்பான தகவல்களைக் கண்டறிதல்.

### 3.6.4. முஸ்லிம் பாடசாலை அபிவிருத்தி

நாடெங்கும் விரிவடைந்துள்ள முஸ்லிம் மாணவர்கள் கூடுதலாகக் கற்கும் பாடசாலைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு இஸ்லாமியக் கலாச்சாரத்தைப் பாதுகாக்கும் சூழலில் அவர்களது கல்வி விருத்திக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்.

2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- இஸ்லாமிய கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்காக பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்ட பணிகளை ஊக்குவித்தல்.
- பாடசாலைக் கல்வியில் பண்புசார் விருத்தியினை ஏற்படுத்துவதற்காக பாடசாலை வெளி மதிப்பீடுகளைப் பலப்படுத்தல்.
- மாணவர்களின் திறமைகளை விருத்தி செய்வதற்கான பங்களிப்பு.
- கைநழுவிச் சென்ற ஓய்வுபெறும் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்காக யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த கல்வி உத்தியோகத்தர்களின் ஆவணங்களை வடக்கு மற்றும் கிழக்குக் கல்வி அலுவலகங்களுக்கு வழங்கும் செயற்பாடுகளை 50% இனால் பூர்த்தி செய்தல்..
- முஸ்லிம் பாடசாலை அதிபர்களின் முகாமைத்துவத் தேர்ச்சி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.

## 3.7 பிரிவெனாக் கல்வி

### 3.7.1 நோக்கம் மற்றும் இலக்கு

- ♦ வருடாந்தம் பிரிவெனா பரிசோதனைகளை நடாத்தி பிரிவெனாக்களுக்கு உதவிகளை வழங்குதல்.
- ♦ ஆசிரியர்களின் நியமனங்களை அங்கீகரித்தல்.
- ♦ பிக்கு மாகாணவர்களின் சிந்தனை விருத்தி.
- ♦ பிரிவெனாக்களின் பதிவாளர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சியினை வழங்குதல்.
- ♦ பிரிவெனா ஆசிரிய ஆலோசகர்களைப் பயிற்றுவித்தல்.
- ♦ பிரிவெனாக் கல்விச் சட்டத்தைதச் சீர்திருத்தல்.
- ♦ அடிப்படை பிரிவெனாப் பாடநூல்களை எழுதுதல்.

### 3.7.2 வருடாந்த செயற்சாதனை

- கடந்த ஆண்டில் உதவி பெறாத 115 பிரிவெனாக்களுக்கு நிலுவைப் பண உதவிகளை வழங்குதல்.
- பிரிவெனாப் பராமரிப்புப் பணிகளுக்காக 25% பங்களிப்பினைவ வழங்குதல்.
- பிரிவெனாக் கல்வியின் எதிர்கால அபிவிருத்திகளுக்காக புத்திஜீவிகளின் கலந்துரையாடலை மருதானை விதோதய பிரிவெனாவில் நடாத்தல் மற்றும் திட்டங்களை வகுத்தல்.
- பிக்கு மற்றும் பிக்கு அல்லாத மாணவர்களின் சிந்தனை விருத்திக்காக மாவட்ட மட்டத்தில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.
- 366 பிரிவெனாக்களின் பதிவாளர் பிரிவெனாப் பொறுப்பாளர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சியினைப் பூர்த்தி செய்தல்.
- சிங்களம், பாளி, கலாச்சாரம், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்காக நியமிக்கப்பட்ட பிரிவெனா ஆசிரிய ஆலோசகர்களுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் 112 ஆலோசகர்களுக்கு பாடவிதானம் மற்றும் பாடநூல் பயன்பாடு தொடர்பாக பயிற்சி வழங்குதல்.
- பிரிவெனா நூலகங்களுக்காக செலவிட்ட நிதியில் 30% இனை வழங்குதல்.
- ஐந்து தமிழ் புத்தகங்கள் வீதம் 305 பிரிவெனாக்களுக்கு வழங்குதல் மற்றும் தமிழ் பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கு தமிழ் பாடநூல் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குதல்.

## 3.8 முறைசாராக் கல்வி

### 3.8.1 நோக்கம் மற்றும் இலக்கு

- ♦ 5-16 வயது பாடசாலை செல்லாத பிள்ளைகளை பாடசாலைக்கு அல்லது கல்விக்கான சந்தர்ப்பத்தினை வழங்குல்.
- ♦ கட்டாயக் கல்விக்கான பங்கேற்பினை உறுதிப்படுத்தல்.
- ♦ பாடசாலையை விட்டுச் செல்லும் பிள்ளைகளின் திறமைகளை விருத்தி செய்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்.

### 3.8.2 வருடாந்தச் செயற்சாதனைகள்

- மாகாண மட்டத்தில் கட்டாயக் கல்விக் குழுக்கள் 4800 இனைப் பலப்படுத்தல்.
- எழுத்தறிவு வகுப்புக்களை 8450 ஆலோசகர்களுக்காக 3 வழிகாட்டல் கோவைகளை வகுத்தல்.
- நாடு பூராகவும் 178 சமூகக்கற்கை மத்திய நிலையங்களைப் பேணல்.
- 80 எழுத்தறிவு ஆலோசகர்களின் கொள்ளளவு விருத்தி வேலைத்திட்டங்களுக்காக ஈடுபடுத்தல்.
- NVQ சான்றிதழுக்காகப் பங்களிப்பு வழங்கும் தொழில்சார் பயிற்சி 15 பாடநெறிகளை ஆரம்பித்தல்.
- பாடசாலை செல்லாத பிள்ளைளை இனங்காண்பதற்காக 12 கோட்டங்களில் ஆய்வுகளை நடாத்துதல்.

## 3.9 விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளின் கல்வி

### 3.9.1 நோக்கம் மற்றும் இலக்கு

விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளுக்கு கல்வி வசதிகளை வழங்குவதற்கு சகல கல்விச் செயற்பாடுகளையும் யதார்த்த பூர்வமாக்குவது அத்தியவசியமாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் ஆகும். தற்போது இவ்வாறான பிள்ளைகளுக்கு கல்வியினை வழங்க பெற்றோர் காண்பிக்கும் ஆர்வங்கள் மிகப் பெரியது. தேசிய பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் இவ்வாறான பரீட்சைகளில் அதிசிறந்த திறமைகளைக் காண்பிக்கும் விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகள் சித்தியடைவது இத்துறையைத் தொடர்ந்தும் விருத்தி செய்வதற்காக செயற்படும் தேவை வலியுறுத்தப்பட்டுள்ளது.

### 3.9.2 வருடாந்த செயற்சாதனை

- விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளுக்கான மூக்குக் கண்ணாடி மற்றும் செவிப்புல உபகரணங்களை வழங்குதல்.
- கண்பார்வை குறைந்த பிள்ளைகளுக்காக கற்கைப் பொருட்களை வழங்குதல்.
- 50 தேசிய பாடசாலைகளில் விசேட கல்விப் பிரிவு உபகரணங்களை வழங்குதல்.
- பாடசாலைகளில் 4 விசேட கல்விப் பிரிவுகளை நவீன மயப்படத்தல்
- தேசிய பாடசாலைகளில் உரிய விசேட கல்விப் பிரிவுகள் 2 இனை நிர்மாணித்தல்.
- பிரெய்ல் அச்சகத்தினை நவீன மயப்படுத்தல்.
- விசேட கல்வித் துறையின் 63 தொழிலாளர்களின் கொள்ளளவு விருத்தி வேலைத்திட்டங்கள்.
- இலங்கையில் விசேட கல்விக்கு 100 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு தேசிய வேலைத்திட்டங்களை கொழும்பு லும்பினி கல்லூரியில் நடாத்துதல்.

# 4. பாட மற்றும் பாட இணை வேலைத்திட்டங்களின் பண்புசார் தரத்தினை விருத்திசெய்தல்

## 4.1 ஆரம்பக் கல்வி

### 4.1.1 நோக்கம் மற்றும் இலக்கு

- ♦ தேசிய பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுக்காகத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
- ♦ ஆரம்பப் பிரிவின் மாணவர்களுக்கு கற்றல் உதவியாக கணினியினைப் பயன்படுத்த வசதிகளை வழங்குதல்.
- ♦ செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் - கற்பித்தல் முறைகளைப் பலப்படுத்தல்.
- ♦ பண்புசார் ஆரம்பக் கல்விக்காக சிறுவர் நட்புறவுப் பாடசாலைப் பிரவேசங்களை அமுல்படுத்தல்.

**சிறுவர் நட்புறவுப் பாடசாலை பிரவேசம் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆறு ஒப்பளவுகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ளன.**

i. உரிமையினை அடிப்படையாகக் கொண்ட உள்ளீடுகள்.
ii. ஆண் பெண் சமூகஞ்சார் மாற்றங்களை மேற்கொள்ளல்.
iii. பிள்ளைகளின் பண்புசார் கற்கைகளின் முன்னேற்றங்கள்
iv. பிள்ளைகளின் சுகாதார மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்
v. மாணவர்கள், குடும்ப மற்றும் சமூகத்தின் நேரடிப் பங்களிப்புக்கள்
vi. சிறுவர் நட்புறவு முறைமை, கொள்கை, நன்னடத்தை மற்றும் கோவைகள் ஊடாக உதவிகளைப் பெறல்.

### 4.1.2 வருடாந்த செயற்சாதனைகள்

- சிறுவர் நட்புறவுப் பாடசாலை வேலைத்திட்டத்தின் பண்புசார் தரம்மிக்க ஆரம்பக் கல்வியினைப் பயன்மிக்கதாக அமுல்படுத்தும் நோக்குடன் சிறுவர் நட்புறவுப் பாடசாலை வேலைத்திட்டங்கள் தொடர்பான நட்புறவுக் கருத்தரங்கு (Symposium) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கல்வியியலாளர்களின் பங்கேற்புடன் கொழும்பில் நடாத்துதல்.

- 1000 இடைநிலைப் பாடசாலை வேலைத்திட்டத்திற்கு உரிய 1680 சிறுவர் நட்புறவு ஊட்டல் பாடசாலைகளின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

- பண்புசார் ஆரம்பக் கல்விக்கான சிறுவர் நட்புறவுப் பிரவேசம் தொடர்பாக ஆலோசனைக் கோவையினை சகல ஆரம்பக் கல்வி உத்தியோகத்தர்கள் மற்றும் ஆரம்ப ஊட்டல் பாடசாலைகளுக்கு வழங்குதல்.

- 3வது பிரதான பருவத்திற்குரிய கற்கைத் தேர்ச்சிகளை மாணவர்களுக்கு வழங்கும் செயற்றிட்டம் கிழக்கு, வடக்கு, மத்தி மற்றும் ஊவா மாகாணங்களில் குறைந்த அடைவு மட்டத்தினைக் காண்பிக்கும் 18 வலயங்களில் அமுல்படுத்தல்.

- மாணவர்களின் கணிதப் பாட விருத்திக்காக ஆசிரிய செயலமர்வுகள் 11 மற்றும் மாணவர் முகாம்கள் 11 இனை நடாத்துதலும் கணித கற்பித்தல் உபகரணங்களைத் தயாரிக்கும் திறமைகளை ஆசிரியர்களுக்கு வழங்குதலும்.

- மாணவர்களின் இடைநிலைப் பருவத்தில் இரட்டை மொழிக் கல்வியில் ஈடுபடுத்துவதற்கான முன்னேற்ற வேலைத்திட்டங்களை 25 ஆசிரியர்கள் மற்றும் 100 மாணவர்களின் பங்கேற்புடன் நடாத்துதல்.

- ஆரம்ப மொழித் தேர்ச்சி மற்றும் ஆரம்பக் கணிதத் திறமைகளை அமுல்படுத்துவது தொடர்பாக 115 ஆரம்பக் கல்வி உத்தியோகத்தர்களை அறிவுறுத்தல்.

- 14 தேசிய பாடசாலைகள் மற்றும் ஆரம்பப் பிரிவின் 4, 5 தரத்தின் மாணவர்களுக்காக நடுத்தர அளவிலான மேசை மற்றும் கதிரை வழங்குதல்.

- 8 தேசிய பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவிற்காக கற்கை உபகரணங்களாக கணினிகளை வழங்குதல்.

- தேசிய பாடசாலைகளுக்காக புதிய கட்டிடங்களை வழங்குதல் மற்றும் 3 தேசிய பாடசாலைகளுக்காக கட்டிடங்களைப் புனரமைத்தல்.

- 208 தேசிய பாடசாலைகளுக்கு ஆரம்பக் கல்வியின் பண்புசார் உள்ளீடுகளைக் கொள்வனவு செய்ய மற்றும் 210 பாடசாலைகளுக்கு விஞ்ஞான கணித உபகரணங்களைக் கொள்வனவு செய்ய நிதி வழங்குதல்.

- ஜனாதிபதி அலுவலகத்துடன் இணைந்து 50 மாணவர்களை விடக் குறைந்த மூடிவிடக் கூடிய அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள ஆரம்பப் பாடசாலைகளைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய 2012 ஆம் ஆண்டில் அபிவிருத்தி செய்ய வேண்டிய 1076 பாடசாலைகள் இனங்காணப்பட்டன. இவற்றில் 170 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளுடன் இணைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் மாகாண மட்டத்திலும் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

- ஆரம்ப சிறுபராய கல்வி ஆரம்பக் கல்விக்கு பலமிக்க அடித்தளத்தினை இடும் நோக்குடன் அமைச்சுக்களுக்கு இடையிலான வேலைத்திட்டங்களை அமுல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

*2012 வருடாந்த செலவினம் : ரூ.மி. 125.3*

## 4.2 கணிதக் கல்வி

### 4.2.1 நோக்கம் மற்றும் இலக்கு

- க.பொ.த. (சா.த.) கணிதப் பாடத்தில் சித்தியடையும் 2015 ஆம் ஆண்டளவில் 70% வரையாக விருத்தி செய்தல்.
- எதிர்கால கணிதவியலாளர்களை உருவாக்குவதற்கான பின்னணியினைத் தோற்றுவிப்பதற்காக மாணவர்களின் திறமையினை விருத்தி செய்தல்.
- கணிதத்தை பிரபல்ய பாடமாக மாற்றியடைத்தல்.
- க.பொ.த. (உ.த.) கணிதத்தில் சித்தியடையும் விகிதாசாரத்தை 2015 ஆம் ஆண்டளவில் 60% மாக விருத்தி செய்தல்.
- கணித ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பாடப் பணிப்பாளர்களைப் பலப்படுத்தல்.
- கணித கற்பித்தலுக்காக தேவையான ஆசிரியர்களை சகல பாடசாலைகளுக்கும் வழங்குதல்.
- கணிதப் பாடத்தை இலகுவாக திருப்திகரமான முறையில் கற்பதற்குத் தேவையான கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.

### 4.2.2. வருடாந்த செயற்சாதனைகள்

- 6ம் தரத்தில் கல்வி பயிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 15,000 மாணவர்கள் மற்றும் 11 ஆம் தரத்தில் கல்வி பயிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 30,000 மாணவர்களுக்காக வலய மட்டத்தில் மீளுட்டல் கல்வி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் மாணவர் பங்கேற்பு இலக்கினைத் தாண்டுதல்.
- அதிதிறமை மிக்க மாணவர்களுக்காக ஒலிம்பியாட்ட வேலைத்திட்டத்தின் கீழ் இந்தியாவின் லக்னோவில் நடைபெறும் சர்வதேச மற்றும் விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டித் தொடரில் (IMSO) தங்கப் பதக்கம் ஒன்று, வெள்ளிப் பதக்கங்கள் மூன்று, உலோகப் பதக்கங்கள் ஐந்து வீதம் சகல மாணவர்களும் பதக்கங்களைப் பெற்றுக் கொண்டமை பாரிய வெற்றியாகும்.
- தாய்வானில் இடம்பெற்ற சர்வதேச கணிதப் போட்டித் தொடரில் (TAIMC) ஒரு வெள்ளிப் பதக்கம், இரண்டு வெண்கலப் பதக்கங்கள் மற்றும் நான்கு திறமைச் சான்றிதழ்களுடன் குழுப் போட்டியில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக்கொள்ள இலங்கை அணிக்கு முடிந்தது.
- கணித வினா விடை மற்றும் கணித நாடகம் உள்ளிட்ட தேசிய மட்டத்திலான கணிதப் போட்டிகளை நடாத்துதல் மற்றும் நாடகப் பிரிவில் வெற்றியீட்டிய முதல் 10 குழுக்களின் நிகழ்வுகளை தேசிய தொலைக்காட்சியூடாக ஒளிபரப்ப நடவடிக்கைகளை எடுத்தல்.
- ஆசிரியர்களின் கேத்திர கணித அறிவினை விருத்தி செய்வதற்காக புத்தகத்தினைத் தயாரித்து அதற்கிணைவாக மாகாண வளவாளர்களுக்குப் பயிற்சியளித்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே மாகாண மற்றும் வலய மட்டத்தில் பயிற்சிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.
- 1000 இடைநிலைப் பாடசாலைகளுக்குரிய பாடசாலைகளில் ஆசிரிய தேவையினை நிறைவேற்றுவதற்காக இணைந்த கணிதத்திற்காக 490 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குதல்.
- ஆசிரியர்களின் கேத்திரகணித அறிவினை விருத்தி செய்வதற்காக மாகாண வளவாளர்கள் மூலம் 317 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 422 விஞ்ஞான ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சியளித்தல்.
- கணித ஆய்வுகூடச் செயற்பாடுகள் தொடர்பாக சகல மாகாண வளவாளர்களுக்கும் பயிற்சியளித்தல்.
- கணித ஆய்வுகூடத்துக்காக 43 உபகரணத் தொகுதிகளைக் கொள்வனவு செய்தல்.

**4.2.1. வரைபு : க.பொ.த. (சா.த.) பரீட்சை 2008 - 2011 கணிதப் பாடத்தில் சித்தியடைந்த விகிதாசாரம்**




*2012 வருடாந்த செலவினம் : ரூ.மி. 4.3*

## 4.3 விஞ்ஞானக் கல்வி

### 4.3.1 நோக்கம் மற்றும் இலக்கு

- மானிட மற்றும் பௌதீக வள விருத்தி.
- ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளின் பண்புசார் தரமிக்க விஞ்ஞானக் கல்வியினை உருவாக்குதல்.
- புதிய பாடவிதானத்தினைக் கற்பிக்கும் முறை மற்றும் மதிப்பீடுகள் ஊடாக விஞ்ஞானக் கல்வி விருத்தி.
- அதிதிறமை மிக்க மாணவர்களுக்கு சர்வதேச போட்டிகளுக்காக சந்தர்ப்பத்தினை வழங்குவதன் மூலம் அவர்களது திறமைகளை மேம்படுத்தல்.
- 2016 ஆம் ஆண்டில் க.பெ.ா.த (சா.த.) சித்தியடைந்த விகிதாசாரத்தை 80 சதவீதமாக மேம்படுத்தல்.
- க.பொ.த. (உ.த.) சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கையினை 40 சதவிதம் வரை அதிகரித்தல்.
- உயர் தர விஞ்ஞானப் பிரிவு கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கையினை 1500 ஆக அதிகரித்தல்.

### 4.3.2. வருடாந்த செயற்சாதனைகள்

- SLASS நிறுவனத்துடன் இணைந்து விஞ்ஞானப் பாடத்துக்குப் பொறுப்பான 240 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்தல்.
- 18 மாணவர்களை சர்வதேச ஒலிம்பியாட் போட்டித் தொடரில் பங்கேற்கச் செய்வதுடன் அவர்களுக்கு விஞ்ஞானப் பாடத்துக்காக 4 தங்கப் பதக்கங்கள், 8 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 6 உலோகப் பதக்கங்கள் பெறப்பட்டன.
- சகல பாடசாலைகளுக்காகவும் விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களின் வருடாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- ஆயிரம் இடைநிலைப் பாடசாலைச் செயற்றிட்டத்தின் கீழ் விஞ்ஞான ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக ஆசிரிய பயிற்சி மொடியூல் தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- மாகாண வளவாளர் குழாமினை 7 மாகாணங்களின் உத்தியோகத்தர்களில் 350 பேர்களுக்காக பயிற்சியளித்தல்.
- 37வெளிக்கள கற்கை மத்திய நிலையங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுடன் சூழல் வேலைத்திட்டங்கள் உள்ளிட்ட வேலைத்திட்டங்களை மாணவர்களுக்காக ஒழுங்கு செய்தல்.

*2012 வருடாந்த செலவினம் : ரூ.மி. 24.3*

**4.3.1. வரைபு : க.பொ.த. (சா.த.) பரீட்சை 2008 - 2011 விஞ்ஞானப் பாடத்தில் சித்தியடைந்த விகிதாசாரம்**




## 4.4 தேசிய மொழிக் கல்வி

### 4.4.1 நோக்கம் மற்றும் இலக்கு

- சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல மாணவர்களின் மொழித் திறமையினை மேம்படுத்தல்
- ஆக்கத்திறனை மேம்படுத்தல்
- ஆசிரியர்களின் மொழி கற்பித்தல் திறமைகளை விருத்தி செய்தல்

### 4.4.2. வருடாந்த செயற்சாதனைகள்

- சிங்கள மொழி மற்றும் இலக்கியப் போட்டித் தொடரை நடாத்துதல்
- அகில இலங்கை தமிழ் மொழி மூல திறமைப் போட்டிகளை நடாத்துதல்
- அம்பாரை மாவட்டத்தின் தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளை நடாத்துதல்
- பொலனறுவை மாவட்டத்தில் க.பொ.த. (உ.த.) மாணவர்களுக்கான செயலமர்வுகளை நடாத்துதல்

*2012 வருடாந்த செலவினம் : ரூ.மி. 2.0*

## 4.5 தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பக் கல்வி

### 4.5.1. நோக்கம் மற்றும் இலக்கு

- ஆரம்பக் கல்வியில் தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பப் பயன்பாட்டின் ஊடான கற்பித்தல் முறையினை ஊக்குவித்தல்.
- பாடசாலை கணினி ஆய்வுகூடத்தைச் சிறந்த முறையில் பேணுதல்.
- சுதந்திர மற்றும் திறந்த மென்பொருள் பயன்பாட்டினை பிரபல்யப்படுத்தல்
- மாணவர்களுக்கு கற்றல் உதவி இணையத்தளத்தினை அண்மிக்கச் செய்தல்.
- 1000 இடைநிலைப் பாடசாலைகளில் இத்தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்ப எழுத்தறிவினை மேம்படுத்தல்.
- தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்ப ஆசிரியர்களின் வினைத்திறனை விருத்தி செய்வதற்கான சிந்தனை விருத்தி.
- கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்புத் தொடர்பான பெறல்.
- 1 - 6 ஆந் தரம் வரையான சகல பாடசாலை மாணவர்களினதும் தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தல்.
- பாடசாலையை விட்டுவிலகும் மாணவர்களின் தகவல் மற்றும் தொடர்புசாதனத்தினை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் பயிற்சியில் ஈடுபடல்.
- பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஆக்க இயலமைகளை விருத்தி செய்தல்.

### 4.5.2 வருடாந்த செயற்சாதனைகள்

- 1 - 6 தரங்களின் சகல பாடங்களுக்காகவும் தயாரிக்கப்பட்ட மென்பொருட்கள் கொண்ட கற்றல் முகாமைத்துவ முறைமையினை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
- இரத்மலான கொத்தலாவபுர மற்றும் பிடிபன மஹிந்தராஜபக்ச கல்லூரியில் மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடத்தின் கீழ் கணினி ஆய்வுகூடத்தைத் திறந்து வைத்தல்.
- இடைநிலைப் பாடசாலைகளுக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட தகவல்கள் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பப் பட்டதாரி ஆசிரியர்களுக்காக அறிவுறுத்தும் செயலமர்வுகளை நடாத்துதல்.
- கொள்ளளவு விருத்தி வேலைத்திட்டங்கள்
- பாட இணை மென்பொருள் ஆக்கம்
- வன்பொருள் மற்றும் வலையமைப்புத் தீர்வுக் குழுவினை விரிவுபடுத்தல்.
- பாடசாலை முறைமையில் கணினி உதிரிப் பாகத் தேவைகளை நிறைவுசெய்தல்.
- Isuru Linux மென்பொருள் பயன்பாடு
- தகவல் தொழில்நுட்ப ஆசிரிய புலமைப்பரிசில் வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்

*2012 வருடாந்த செலவினம் : ரூ.மி. 45.9*

## 4.6 ஆங்கில மொழிக் கல்வி

### 4.6.1. நோக்கம் மற்றும் இலக்கு

- க.பொ.த. (சா.த.) மாணவர் அடைவு மட்டத்தினை மேம்படுத்தல்.
- ஆரம்ப மற்றும் இடைநிலைத் தரங்களின் கற்பித்தல் தரத்தினை விருத்தி செய்தல்.
- ஆங்கில மொழியின் பல்வேறுபட்ட திறமைகளை விருத்தி செய்வதற்காக மாணவர்களுக்கு சந்தர்ப்பத்தினை வழங்குதல்.
- ஆங்கில மொழிக்காக திறந்த கற்கைச் சந்தர்ப்பங்களை வகுத்தல்.
- பயிற்றுவிப்பாளர்களின் தொழில் மற்றும் கொள்ளளவினை விருத்தி செய்தல்.

### 4.6.2. வருடாந்த செயற்சாதனைகள்

- திருகோணமலை, பதுளை, கண்டி, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மொனராகலை போன்ற குறைந்த அடைவுமட்டம் கொண்ட மாவட்டங்களில் விசேட வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- விசேட கற்பித்தல் முறைகள் தொடர்பாக ஆசிரிய பயிற்சியினை வழங்குவதற்கும், உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்த மற்றும் மேலதிக கற்றல் பொருட்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுத்தல்.
- பிரதேச ஆங்கில உதவி மத்திய நிலையங்கள் (RESC) 30 ஊடாக ஆரம்ப மற்றும் இடைநிலை ஆங்கில கற்பித்தலினை விருத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல்.
- தேசிய ஆங்கில மொழித் தின போட்டியினை கோட்ட மற்றும் வலய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் நடாத்துதல்.
- இணையத்தளம் ஊடாக திறந்த கற்றலுக்கான சந்தர்ப்பத்தினை விருத்தி செய்து கஷ்டப் பிரதேசங்களின் பிள்ளைகளுக்கு க.பொ.த. (உ.த.) பொது ஆங்கிலத்தினைக் கற்பிப்பதற்காக பாடநெறியினை அமுல்படுத்தல்
- 1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்தின் கீழ் 1000 ஆங்கிலப் பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்வதற்காக நேர்முகப் பரீட்சை நடாத்தி 201 பேர்களைத் தேர்ந்தெடுத்தல்
- இரண்டு மொழியியல் ஆய்வுகூடங்களை நிர்மாணித்தல், வாழ்க்கைத் தேர்ச்சிக்காக ஆங்கில வேலைத்திட்டம்.
- பாடசாலை மாணவர்களின் ஆங்கிலப் பேச்சு மற்றும் செவிமடுக்கும் திறனினை விருத்தி செய்யும் நோக்குடன் மற்றும் ஆங்கில ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளில் பயன்படுத்தக் கூடிய வகையில் 9, 10, 11 ஆந் தரங்களுக்காக இறுவெட்டுக்கள் தயாரித்து விநியோகிக்கப்பட்டன.
- 6, 7, 8 ஆந் தரங்களின் மாணவர்களுக்காக 90 செயற்பாடுகளைக் கொண்ட கற்றல் உபகரணங்கள் தயாரிக்கப்பட்டன.
- 9 மாகாணங்களில் 9 மொழியியல் ஆய்வுகூடங்களை நிர்மாணிப்பதற்கான அடிப்படைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- கல்விக் கல்லூரி மற்றும் ஆசிரிய கல்லூரிகளில் ஆசிரிய பயிற்சிகளுக்காக ஆலோசனைக் கோவைகள் வழங்கப்பட்டன.
- மாணவர்களின் ஆங்கிலப் பேச்சு மற்றும் செவிமடுப்புத் திறனை விருத்தி செய்வதற்காக ஆசிரியர்களுக்காக 10 நாள் பயிற்சி செயலமர்வு நடாத்தப்பட்டது.

*2012 வருடாந்த செலவினம் : ரூ.மி. 27*



கிராமிய பாடசாலைகளுக்கு கணினி வசதிகள்........



கணிதத்தினை விருப்பத்துடன் கற்பதற்கான சந்தர்ப்பம்........



கவர்ச்சி மிகுந்த பாடசாலைச் சூழல்........



கணினி கற்கை உபகரணமாக........



கணிதத்தினைக் கற்பதற்கான சந்தர்ப்பம்........



## 4.7 மானிட சாஸ்திரக் கல்வி

### 4.7.1. நோக்கம் மற்றும் இலக்கு

- ♦ க.பொ.த. (சா.த.) மாணவர் அடைவு மட்டத்தினை 2015 ஆம் ஆண்டளவில் 10% இனால் மேம்படுத்தல்.
- ♦ கரையோர வள முகாமைத்துவப் பாதுகாப்புத் தொடர்பாக மாணவர்களின் தேர்ச்சி மட்டத்தினை மேம்படுத்தல்.
- ♦ தேசிய மரபுரிமைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பில் மாணவர்களின் ஆர்வத்தினை ஏற்படுத்தல்.

### 4.7.2. வருடாந்த செயற்சாதனைகள்

- வரலாற்றுப் பாட விருத்திக்காக வடமத்தி, தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் 850 வரலாற்று ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்தல்.
- கஷ்டப் பாடசாலைகளுக்காக தேசிய வரைவுக் கோவைகளை வழங்குவதன் கீழ் வடக்கு, ஊவா, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களின் 39 பாடசாலைகளுக்காக புத்தகங்களை விநியோகித்தல்.
- 2011 அகில இலங்கை சமூகவியல் போட்டித் தொடரில் வெற்றியீட்டிய 650 மாணவர்களுக்கு பசிரில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் 2012 அகில இலங்கை போட்டித் தொடரினை நடாத்தி 471 மாணவர்களுக்காக பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல்.
- புவியியல் ஆலோசனைக் கோவையினை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலப் பிரதிகளை மாகாணங்களுக்கு அனுப்புதல்.
- புவியியல் பாட விருத்திக்காக 550 இடைநிலைப் பாடசாலைகளில் புவியியல் சங்கங்களைத் தாபித்தல்.
- கரையோர வள முகாமைத்துவத் துறையின் கல்வி வேலைத்திட்டத்திற்கு உரியதாக 15 இறுவெட்டுக்களைத் தயாரித்தல் மற்றும் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் உட்பட 70 உத்தியோகத்தர்களின் தேர்ச்சியினை ஏற்படுத்தல்.
- 6 - 11 இடைநிலைத் தரங்கள் நடைபெறும் பாடசாலைகளில் தேசிய உரிமைகள் தொடர்பான மாணவர் அமைப்பினைத் தாபிக்க நடவடிக்கை எடுத்தல்.

*2012 வருடாந்த செலவினம் : ரூ.மி. 2.9*

## 4.8 அழகியற் கல்வி

### 4.8.1 நோக்கம் மற்றும் இலக்கு

- ♦ மாணவர்களின் திறமைகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தல்.
- ♦ அழகயில் உபகரணங்களை பாடசாலைகளுக்கு வழங்குதல்.
- ♦ பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களின் திறமைகளை விருத்தி செய்தல்.
- ♦ வாத்தியக் கருவிப் பயிற்சிக்காக மாணவர்களை ஈடுபடுத்தல்.

### 4.8.2. வருடாந்த செயற்சாதனைகள்

- அகில இலங்கை பாடசாலை சிறுவர் சித்திரம், நடனம், சங்கீதம், நாடகம் மற்றும் நடனக் கலை, மாகாண மற்றும் தேசிய மட்டத்திலான போட்டியில் 425,000 பிள்ளைகளை பங்கேற்கச் செய்தல்.
- தேவைகளை இனங்கண்டு 65 ஆரம்பப் பாடசாலைகளுக்க அழகியல் உபகரணங்களை வழங்குதல்.
- ஆனந்த சமரக்கோன் ஞாபகார்த்த மன்றம் ஹோமாகம மற்றும் காலி கல்வி வலயங்களின் 100 மாணவர்களுக்காக நகைச்சுவை நிகழ்ச்சிகளை நடாத்தல்.
- இலங்கை பாடசாலை மாணவர்களின் அழகியல் திறமைகளை மேம்படுத்துவதுடன் நடாத்தப்படும் உலகின் மிகப்பெரிய எசல மகா மாணவர் பெரஹரவில் 400 பாடசாலைகளின் 15,000 பேர் மற்றும் 4000 பாடசாலை வாத்தியக் குழுக்களின் பங்கேற்புடன் கொழும்பில் நடாத்துதல்.
- சுயதொழில் வாய்ப்புக்களுக்காக ஈடுபடுத்துவதற்கு பல்கலை பாடசாலைகள் மூலம் 6,000 மாணவர்களுக்குப் பயிற்சி வழங்குதல்.

*2012 வருடாந்த செலவினம் : ரூ.மி. 27.1*

## 4.9 விவசாய மற்றும் சுற்றாடல் தொழில்நுட்பக் கல்வி

### 4.9.1. நோக்கம் மற்றும் இலக்கு

- விவசாயப் பாடத்தினைக் கற்பிப்பதற்காக மாணவர்களை ஆர்வமூட்டல்.
- பாடசாலை வளாகத்தினை முன்மாதிரியான விவசாய விளைநிலமாக மாற்றியமைத்தல்.
- பாடசாலை மட்டத்தில் விவசாயத் தொழில் முயற்சிக்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.
- விவசாய தொழில்சார் பயிற்சிக்கான சந்தர்ப்பங்களுக்காக மாணவர்களுக்காக வழிகாட்டுதல் (NVQ)
- வளாகத்தில் இடவசதியற்ற பாடசாலைகளுக்காக நகர விவசாய வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- பாடசாலை மற்றும் அலுவலக வளாகத்தினை அழகுபடுத்தல்.
- சூழல் தொடர்பான ஆராய்ச்சிகள் மற்றும் செயற்றிட்டங்களை மேற்கொள்ள மாணவர்களை ஈடுபடுத்தல்.
- சக்திவளம், நீர், மண் மற்றும் கழிவு முகாமைத்துவத்தினை உரியவாறு பாடசாலைகளில் அமுல்படுத்தல்.
- விவசாய ஆசிரியர்களுக்காக பிரயோகப் பயிற்சியினை வழங்குதல்.

### 4.9.2 வருடாந்த செயற்சாதனைகள்

- "சிசுசவியன் - ரண் அஸ்வெனு" என்ற தொணிப்பொருளுடனான பாடசாலை விவசாயத் தோட்டப் போட்டி வலய, மாகாண மற்றும் அகில இலங்கை மட்டத்தில் நடாத்துதல்.
- பாடசாலை மாணவர்களின் பங்கேற்புடன் சிங்கள, தமிழ், புத்தாண்டு சுபவேளையில் 40 இலட்சம் மரக்கன்றுகளை நடும் வேலைத்திட்டம் "இன்று நாம் பயிரிடுவோம் - நாளை பயன்பெறுவோம்" என்ற தொணிப்பொருளின் கீழ் அமுல்படுத்தல்.
- 'கப்றுக்க - சிப்நென' வேலைத்திட்டத்தின் வீட்டுத் தோட்டத்தில் தெங்கு நடக்கூடிய கீழ் 6ம் தரத்தின் மாணவர்களுக்கு தெங்கு அபிவிருத்தி அமைச்சினால் தென்னங் கன்றுகளை வழங்குதல்.
- திவிநெகும தேசிய திட்டத்துடன் இணைந்த பாடசாயைில் முன்மாதிரியான விவசாயத் தோட்டமாக மாற்றிமைப்பது தொடர்பில் சகலரையும் அறிவுறுத்தல்.
- நில அலங்கார மற்றும் பிரயோக விவசாய வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக 110 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல்.
- நீர், கல்வி, வளிமண்டலக் கல்வி, நுண்ணுயிரியல் கல்வி மற்றும் GLOBE வேலைத்திட்டத்தின் கீழ் பூமியினைத் தழுவக்கூடியதான கல்வி தொடர்பான 100 விவசாய ஆசிரியர்களை அறிவுறுத்தல்.
- 20 தேசிய பாடசாலைகளுக்கு விவசாய உபகரணங்களை வழங்குதல்.
- பசுமையான பாடசாலை வேலைத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக 100 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் பாடசாலை திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.

*2012 வருடாந்த நிதி ஒதுக்கீடு : ரூ.மி. 4.1*

## 4.10 தொழில்நுட்பக் கல்வி

### 4.10.1 நோக்கம் மற்றும் இலக்கு

- தொழில்நுட்பப் பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்களின் பாட அறிவு மற்றும் பிரயோகத் திறமைகளை விருத்தி செய்தல்.
- பாடத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மற்றும் உதவி ஆசிரியர்களின் கடமைச் செயற்பாட்டு விருத்தி.
- பாடசாலை மாணவர்களின் புதிய ஆக்க விருத்தி.
- மாணவர்களின் பிரயோகத் திறமை விருத்தி.

### 4.10.2 வருடாந்த செயற்சாதனைகள்

- வடமேல் மற்றும் தென்மாகான 117 தொழில்நுட்ப ஆசிரியர்களுக்காக தொழில்சார் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
- தொழில்நுட்ப மற்றும் மனைப்பொருளியல் பாடத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்களின் கொள்ளளவு விருத்தி வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
- "சகசக் நிபயும்" தேசிய போட்டிக்காக பாடசாலைகளில் 250 புத்தாக்கங்களுக்கு வெற்றி கிடைத்தல்.
- 40 தேசிய பாடசாலைகளுக்காக தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் 20 பாடசாலைகளுக்காக மனைப்பொருளியல் பாட உபகரணங்களை வழங்குதல்.
- புதிய 46 தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கு தொழில்சார் விருத்திச் செயலமர்வுகளை நடாத்துதல்.
- க.பொ.த. (சா.த.) பெறுபேறுகள் குறைந்த வெலிகமுவ வலயத்தின் 50 ஆசிரியர்களுக்காக பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல்.

## 4.11 வர்த்தக மற்றும் வாணிபக் கற்கை

### 4.11.1 நோக்கம் மற்றும் இலக்கு

- பாடவிதான விருத்திக்காக தொழில்சார் நிறுவனங்களின் உதவியினைப் பெறல்
- மாணவர் அடைவு மட்டத்தினை விருத்தி செய்தல்.
- மாணவர்களின் பிரயோகத் திறமைகளை மேம்படுத்தல்.
- தேசிய பாடசாலைகளில் வர்த்தகப் பிரிவுகளிற்கு கணினிகளை வழங்குதல்.
- அறிவுக் களஞ்சியப் போட்டிகள், பல்வேறுபட்ட செயலமர்வுகள் மற்றும் தேசிய பாடசாலை மட்டத்தில் போட்டிகளை நடாத்துதல்.
- ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளில் வர்த்தகக் கல்வியினை மேம்படுத்தல்.
- ஆசிரிய பயிற்சி வேலைத்திட்டங்களைத் திட்டமிடல்.

### 4.11.2 வருடாந்த செயற்சாதனைகள்

- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம், இலங்கை கணக்காளர் தொழில்நுட்ப நிறுவகம், இலங்கை பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழுச் சபை, இலங்கை மத்திய வங்கி ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் பாடவிதான விருத்தி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- கணக்காளர் நிறுவனத்துடன் இணைந்து சிறந்த வருடாந்தக் கணக்கறிக்கைகள் தொடர்பாக தேசிய பாடசாலைகளில் போட்டிகளை நடாத்துதல்.
- 2012 க.பொ.த. (உ.த.) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக உதவிக் கருத்தரங்குகள் நடாத்தல்.
- வர்த்தக மாணவர் சங்கச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக பாடசாலைகளுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்க நடவடிக்கைகள் எடுத்தல்.
- 1000 இடைநிலைப் பாடசாலை வேலைத்திட்டத்திற்குரிய 405 பாடசாலைகளின் அதிபர்களை வர்த்தகக் கல்வி மேம்பாடு தொடர்பாக அறிவுறுத்தல்.
- பாடசாலைக் கூட்டுறவினை மீள அமுல்படுத்துவதற்காக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சுடன் இணைந்து செயற்படுவதற்காக சுற்றறிக்கையினைத் தயாரித்தல்.
- வர்த்தகப் பாடவிருத்தி தொடர்பாக பல்கழலக்ழகப் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், பாடப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடல் மற்றும் வர்த்தகப் பாடவிருத்திக்காக 13 அங்கத்தவர்கள் கொண்ட புத்திஜீவிகளை நியமித்தல்.
- ஆசிரிய பயிற்சித் தேவைகளை இனங்கண்டு பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல்.

*2012 வருடாந்த செலவினம் ரூ.மி. 3.3*

## 4.12 உடற்கல்வி மற்றும் விளையாட்டுத் திறமைகளை விருத்தி செய்தல்

### 4.12.1 நோக்கம் மற்றும் இலக்கு

- ஆரம்பப் பிரிவின் மாணவர்களது உடற் தகைமைகளை விருத்தி செய்தல்.
- சகல கல்வி வலயங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்தல்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட 6 விளையாட்டுக்களுக்காக திறமை மிக்க விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சிக் குழாம்களை உருவாக்குதல்.
- சர்வதேசத்தை வெற்றி கொள்ளக் கூடிய விளையாட்டு வீரர்களை நாட்டில் உருவாக்குதல்.

### 4.12.2 வருடாந்த செயற்சாதனைகள்

- 27 விளையாட்டுக்களுக்காகத் திறமை மிக்க விளையாட்டு வீரர்கள் அத்திறமையினை அகில இலங்கை மட்டத்தில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தல்.
- விளையாட்டின் மூலம் திறமைகளைக் காண்பிக்கும் பாடசாலைகளை ஊக்குவிப்பதற்காக விளையாட்ட உபகரணங்களை வழங்குதல்.
- சகல கல்வி வலயங்களிலும் ஒரு ஆசிரியர் வீதம் 86 வளவாளர்களுக்கான பயிற்சியளித்தல்.
- சகல வலயங்களினையும் உட்படுத்தக் கூடியவாறு 6 விளையாட்டுக் குழுக்களுக்குரிய 120 விளையாட்டு ஆலோசகர்களுக்குப் பயிற்சியளித்தல்.
- அரோபிக்ஸ், ஜிம்னாஸ்டிக் விளையாட்டுகளுக்காக தேசிய மட்டத்தில் திறமைகளைக் காண்பித்துள்ள 40 விளையாட்டு வீரர்களை பயிற்சிக் குழாமில் இணைத்துக் கொள்ளல்.
- விளையாட்டுப் பாடசாலைகளுக்காக உரிய மாவட்டங்களில் திறமைமிக்க மாணவர்களை இணைத்துக் கொள்ளல்.
- 50 இடைநிலைப் பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்குதல்.
- 341 தேசிய பாடசாலைகளுக்காக விளையாட்டு உபகரணங்களை வழங்குதல்.

*2012 வருடாந்த செலவினம் ரூ.மி. 56.1*

## 4.13 சமய மற்றும் விழுமியக் கல்வி

### 4.13.1 நோக்கம் மற்றும் இலக்கு

- பௌத்த கல்வி தொடர்பான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்.
- க.பொ.த. (சா.த.) சமயப் பாடங்களின் அடைவு மட்டத்தினை மேம்படுத்தல்.
- பாடசாலை மாணவர்களுக்கிடையே விழுமிய விருத்திகளை மேற்கொள்ளல்.

### 4.13.2. வருடாந்த செயற்சாதனைகள்

- பௌத்த ஆலோசைனச் சபைக் கூட்டத்தை நடாத்தி பாடநூல், ஆசிரிய ஆலோசனைக் கோவை மற்றும் பௌத்த கல்வி தொடர்பான ஆலோசனைகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- பௌத்த சமயப் பாட விருத்தி மற்றும் விழுமியம் தொடர்பாக கிழக்கு, வடமத்தி மற்றும் வட மாகாணங்களில் பாடப் பணிப்பாளர்களின் கோட்ட மற்றும் வலயப் பணிப்பாளர்கள் உட்பட ஆசிரிய ஆலோசகர்களை அறிவுறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- பௌத்த மாணவர் சங்க முகவர் வேலைத்திட்டங்களை நடாத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- 2600 சிறி சம்புத்தத்த ஜயந்தியை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட விசேட வேலைத்திட்டமாக சகல வெசாக் நோன்மதி தினங்களிலும் அண்மித்த வெள்ளிக்கிழமை தினத்தில் பௌத்த மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளில் சகல மாணவர்களினதும் பங்கேற்புடன் சில் அனுஷ்டான வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
- க.பொ.த. (சா.த.) சகல சமயப் பாடங்களினதும் அடைவு மட்டங்களை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.
- இந்து, இஸ்லாம், கிறிஸ்த்து மற்றும் கத்தோலிக்க சமயங்களுக்குரிய பாடசாலை மாணவர்களுப்பிடையே விழுமிய விருத்திக்கான வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- ஆசிய ஒழுக்க விழுமிய முறைமைகளை வகுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

*2012 வருடாந்த செலவினம் ரூ.மி. 1.2*

## 4.14 இரட்டை மொழிக் கல்வி

### 4.14.1. நோக்கம் மற்றும் இலக்கு

சிங்கள மற்றும் தமிழ் மொழிக் கல்வியினை ஆரம்பப் பருவத்தில் இருந்தே பயன்படுத்துவதனை உறுதி செய்வதுடன் இடைநிலைத் தரங்கள் தொடக்கம் ஆங்கில மொழி மூலமான பாடங்களைக் கற்பிப்பதன் மூலம் விரிவான கற்றலுக்கான சந்தர்ப்பத்தினை வழங்குவது இரட்டை மொழிக் கல்விப் பிரிவின் நோக்கமாகும்.

- இரட்டை மொழிக் கல்வி வேலைத்திட்டங்களுக்காக மாகாண வளவாளர் குழாமினை ஏற்படுத்தல்.
- இரட்டை மொழிக் கல்வியின் நோக்கங்களுக்கு ஏற்றவாறு பாட மொழி இணைப்புக் கற்கைப் பிரவேசங்களுக்காக தேசிய மட்டங்களிலான கோட்பாடகளை வகுத்தலும், அடுத்தகட்ட பொருத்தமானவாறாகக் காணப்படும் பாடநெறிகளை வகுத்தல்.
- இரட்டை மொழிக் கல்வி வேலைத்திட்டங்கள் கொண்ட பாடசாலை எண்ணிக்கையினை அதிகரித்தல்.
- இரட்டை மொழிக் கல்வி ஆசிரியர் பற்றாக்கறைக்கு வியூகத் திட்டமிடலுக்கு அமைய முறைமையில் காணப்படும் ஆசிரியர்களின் பயன்பாட்டினை விருத்தி செய்தல்.

### 4.14.2 வருடாந்த செயற்சாதனைகள்

- விஞ்ஞான மற்றும் கணித பாடங்களுக்காக தொடராக 49 வளவாளர்கள் மற்றும் 59 பேர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காகவும் அவ்வளவாளர்களைப் பயன்படுத்தி மாகாண ஆசிரியர் பயிற்சி வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்.
- பாட - மொழி ஒருங்கிணைப்புக் கற்றல் பிரவேசங்களுக்காக தேசிய மட்டத்திலான சிந்தனைக் கோட்பாட்டின் அடிப்படைப் பிரதிகள் மற்றும் கையேடுகள் தயாரித்தல்.
- இரட்டை மொழிக் கல்வி தொடர்பான கருத்தரங்கு (Symposium) நடாத்துதல்.
- இரட்டை மொழிக் கல்வி வேலைத்திட்டங்கள் கொண்ட பாடசாலை எண்ணிக்கையை 937 தொடக்கம் 1003 வரை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல்.
- உரிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களை இரட்டை மொழிக் கல்வி ஆசிரியர்களாக விருத்தி செய்தல்.

*2012 வருடாந்த செலவினம் ரூ.மி. 0.3*

## 4.15 மும்மொழி இலங்கை வேலைத்திட்டம்

### 4.15.1 நோக்கம் மற்றும் இலக்கு

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகள் தொடர்பான அறிவின் பயன்பாட்டு இயலுமை கொண்ட எதிர்கால சந்தயினரை உருவாக்குவது தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக பயன்மிக்க தேசிய தேவையாக அரசாங்கத்தினால் இனங்காணப் பட்டுள்ளது. இத்தேவையினை நிறைவேற்றுவதற்காக தேசிய மொழி மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு உட்பட உரிய ஏனைய நிறுவனங்களுடன் விசேட வேலைத்திட்டங்களை பாடசாலை மட்டத்தில் அமுல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- 1-5 ஆரம்பத் தரங்களின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மும்மொழி அறிவினை மேம்படுத்தல்.
- கல்வி அமைச்சின் வளாகத்துக்குள் கல்வி மற்றும் கல்விசாராப் பணியாளர்களுக்கிடையே மும்மொழி அறிவினை விருத்தி செய்தல்.

### 4.15.2 வருடாந்த செயற்சாதனைகள்

- 1-5 தரங்களுக்குரிய பாடப்பரப்பு I,II,III கட்டங்களை அமுல்படுத்துவதற்காக 8,545 பாடசாலைகளுக்கு ஆலோசனைகளை வழங்குதல்.
- வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பாடசாலைப் பிள்ளைகளின் (1-5 தரம்) மும்மொழி அறிவினை மேம்படுத்தல்.

## 4.16 பாடசாலை நூலக அபிவிருத்தி

### 4.16.1 நோக்கம் மற்றும் இலக்கு

- பாடசாலை நூலகப் பொருட்களின் மொத்தத்தை விருத்தி செய்தல்.
- தேசிய பாடசாலை நூலக வசதிகளை மேம்படுத்தல்.
- பாடசாலைச் சிறார்களுக்கிடையே வாசிப்புப் பக்கத்தினை ஊக்குவித்தல்.
- சிறுவர் வாசிப்புப் பொருட்களைத் தயாரிப்பது தொடர்பான ஒப்பளவுகளை வகுத்தல்.
- புதிய கற்றல் - கற்பித்தல் முறைகளை விருத்தி செய்தல்.
- வெற்றிகரமான வளவாளர்களை உருவாக்குதல்.
- சிறுவர் வாசிப்புப் பொருட்களின் பண்புசார் தரத்தினை மேம்படுத்தல்.

### 4.16.2 வருடாந்த செயற்சாதனைகள்

- 115 தேசிய பாடசாலைகளுக்காக புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்கு 8.69 மில்லியன் ரூபா நிதியத்தினை வழங்குதல்.
- 13 தேசிய பாடசாலைகளுக்காக 1.5 மில்லியன் ரூபாப் பெறுமதியான நூலக தளபாடங்களை வழங்குதல்.
- வாசிப்பு முகாம்களை நடாத்துதல்.
- சிறுவர் வாசிப்புப் பொருட்களைத் தயாரிப்பது தொடர்பாக எழுத்தாளர்களை அறிவுறுத்துவதற்கான 6 செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன.
- தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து 85 கல்வி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரித்தல்.

*2012 வருடாந்த செலவினம் ரூ.மி. 12.0*

## 4.17 சுகாதார ஊக்குவிப்பு மற்றும் போசாக்கு வேலைத்திட்டங்கள்

### 4.17.1. நோக்கம் மற்றும் இலக்கு

- பாடசாலை மாணவர்களுக்கு சிறந்த ஒழுங்க்க நெறிகள் மற்றும் சுகாதாரப் பழக்கவழக்கங்களை ஊக்குவித்தல்.
- பாடசாலை மாணவர்களின் போசாக்குத் தரத்தினை மேம்படுத்தல்.
- நாளாந்தச் சமூகமளிப்பினை மேம்படுத்தல்
- சிறந்த உணவுப் பழக்கவழக்கங்களை மாணவர்களுக்கிடையே பிரபல்யப்படுத்தல்.
- பாடசாலைகளில் நீர் மற்றும் சுத்திகரிப்பு வசதிகளை உறுதிப்படுத்தல்.
- சுகாதார பாதுகாப்பு மிகுந்த பாடசாலைச் சூழலை உருவாக்குதல்.
- கல்விக்கான செயற்பபட்டு பங்களிப்பினை விருத்தி செய்தல்.
- சுகாரதார தரம்மிக்க பாடசாலை சூழல் தொடர்பாக 34 மாணவர் முகாம்களை நடாத்துதல்.

### 4.17.2 வருடாந்த செயற்சாதனைகள்

- பாடசாலை வளாகத்துக்குள் உணவுப் பயன்பாட்டின் மாற்றங்கள் தொடர்பான உணவகச் சுற்றறிக்கை யினை அமுல்படுத்தலும், மேற்பார்வை செய்தலும்.
- நீர் மற்றும் போதியளவு சுத்திகரிப்பு வழங்குவதற்கான ஒதுக்கீடுகளை மாகாணங்களுக்கு வழங்குதல்.

4.17.1. அட்டவணை : நீர் மற்றும் சுத்திகரிப்ப வசதிகள் வழங்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை - 2012

| மாகாணம் | வசதிகளைப் பெறும் பாடசாலைகளின் எண்ணிக்கை |
|---|---|
| வடக்கு | 50 |
| வட மத்தி | 50 |
| ஊவா | 56 |
| மத்தி | 51 |
| கிழக்கு | 50 |
| மேல் | 7 |
| தென் | 8 |

- மத்திய, ஊவா, கிழக்கு ஆகிய மாகாணங்களுக்காக சுகாதார ஊக்குவிப்பு 35 ஆசிரிய பயிற்சி அமர்வுகளை நடாத்துதல்.
- 40 மாணவர் முகாம்களை நடாத்துதல்.
- டெங்கு நுளம்பினை ஒழிப்பது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைய பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள முறைகள் தொடர்பாகக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- மொரட்டுவைப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு ஊர்வலம் நடாத்தப்பட்டது.
- சுகாதார ஊக்குவிப்பு மற்றும் தடுப்பு (HIV/AIDS) வேலைத்திட்டத்தின் கீழ் 35 மாணவர் முகாம்கள் மற்றும் 3 ஆசிரிய பயிற்சிச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன.

### 4.17.2 அட்டவணை : போசாக்கு வேலைத்திட்டம் -2012

| போசாக்கு வேலைத்திட்டம் | அமல்படுத்தப் பட்ட பாடசாலை களின் எண்ணிக்கை | பயன்பெறும் மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|
| மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குதல் | 6,775 | 839,643 |
| மாணவர்களுக்கு பசும்பால் வழங்குதல் | 1,701 | 210,655 |
| உலக உணவு வேலைத்திட்டம் | 850 | 175,258 |

- 10ம் தரத்தின் மாணவர்களுக்காக சுகாதார அறிவுக்களஞ்சியப் போட்டித் தொடர்களை நடாத்துதல்.
- சுகாதார ஊக்குவிப்புத் தொடர்பாக சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் 26 நிகழ்ச்சிகளை ஊடகங்கள் மூலம் ஒளிபரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- சுகாதார ஊக்குவிப்பு பாடசாலைகளை உறுதிப்படுத்துவதற்காக 2012 ஆம் ஆண்டுக்காக 28 உத்தேச வலயங்களை அமுல்படுத்தல்.
- மாணவர்கள் மத்தியில் சிறந்த சுகாதாரப் பழக்கங்கள் மற்றும் ஒழுக்கங்களை ஊக்குவிப்பதற்காக அறிவுறுத்துவதற்காக 43 வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- சுகாதார அமைச்சு மற்றும் ஜனாதிபதி அலுவலகத்துடன் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்ட சுகாதார வேலைத்திட்டங்களுக்காக பாடசாலை மாணவர்களை பங்கேற்கச் செய்தல்.

**பகல் போசனைத்தினை வழங்கும் பாடசாலைகளின் மாணவர்களின் நாளாந்த சமூகமளிப்பினை ஊக்குவித்தல்**

| 2009 | | 2011 |
|---|---|---|
| 80 % | → | 83.4 % |

**மதிய உணவு வழங்கும் பாடசாலைகளின் ஐந்தாம் தரத்தின் புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்டதன் விகிதாசாரம்**

| 2005 | | 2011 |
|---|---|---|
| 20 % | → | 49 % |

*2012 வருடாந்த செலவினம் ரூ.மி. 3428*




மொரட்டுவைப் பிரதேசத்தில் நடாத்தப்பட்ட டெங்கு ஊர்வலம்



எசலமகா மாணவர் பெரகராவின் கவர்ச்சிக்குரிய நிகழ்வு



'இன்று பயிரிடுவோம் - நாளை பயன்பெறுவோம்' தேசிய வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல்



2012 பகல்போசன உணவு வழங்கும் தேசிய விழா - யாழ் வல்வெட்டித்துறை சிவகுரு கல்லூரியில்



2012 தேசிய பாடசாலை விளையாட்டு விழாவில் விருது வழங்கல்



## 4.18 சமூக நல்லிணக்கம் மற்றும் சமாதானக் கல்வி

### 4.18.1 நோக்கம் மற்றும் இலக்கு

- ♦ கூட்டுச் செயற்பாடுகள், இணைந்து வாழும் திறமைகள் மற்றும் மானிட பண்புமிக்க சமூகத்தை பாடசாலை முறைமையின் ஊடாக சமூகத்துக்கு வழங்குதல்.
- ♦ பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு ஜனநாயகம் மற்றும் அதன் விழுமியங்கள், பிரயோக அனுபவத்தினை எட்டச்செய்தல்.
- ♦ தேசத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பான கூட்டுச் செயற்பாட்டுச் சிந்தனைகளை விருத்தி செய்தல்.
- ♦ வடக்கு, கிழக்கில் பெற்றோரின் அரவணைப்பினை இழந்த பாடசாலைப் பிள்ளைகளுக்காக தென்னிலங்கைப் பாடசாலைப் பெற்றோரின் அரவணைப்பினை வழங்கும் செயற்பாடுகள்.

ரூ.மி.1.4

### 4.18.2. வருடாந்த செயற்சாதனைகள்

- *செனகஸ தக்சலா* இனங்களுக் கிடையிலான நட்புறவுப் பாடசாலை வேலைத்திட்டம் தொடர்பாக பண்டாரவளை - கல்குடாவின் 30 பாடசாலைகள் மன்னார் - குருனாகலை 30 பாடசாலைகள், குளியாப்பிட்டிய - மடு 30 பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை அறிவுறுத்தல்.
- பாடசாலை, மாகாண மற்றும் தேசிய மட்டத்திலான மாணவர் பாராளுமன்றங்களைத் தாபித்தலும், அது தொடர்பான செயற்பாடுகளை அமுல்படுத்தலும்.
- வடக்கு, கிழக்கு செனகஸ தக்சலா என்ற வேலைத்திட்டத்துடன் தொடர்புபடும் பாடசாலைகளின் பெற்றோர் அரவணைப்பினை வழங்குவதற்காக பெற்றோரை இழந்த பிள்ளைகளை இனங்காணுதல்.

## 4.19 மாணவர் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைச் சேவை

### 4.19.1 நோக்கம் மற்றும் இலக்கு

- ♦ மாணவர்களுக்கிடையே சிறந்த உளநல மேம்பாட்டுக்கான கல்வி விருத்தி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- ♦ எதிர்கால வேலை உலகு தொடர்பாக மாணவர்கள் அறிவுறுத்தப்படுவதனை மேம்படுத்தல் மற்றும் தொழில் ஆர்வத்தினை இனங்காண மாணவர்களுக்கு உதவுதல்.
- ♦ சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தவிர்ப்பதற்காக மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு பாதுகாப்பு மிக்க சூழல்களை ஏற்படுத்தல்.
- ♦ தோட்டம் சார்ந்த பாடசாலைகளின் மாணவர்களது பிரச்சினைகளைத் தீர்க்கப் பொருத்தமான உளநல சூழலை வகுத்தல்.
- ♦ அனர்த்தங்களை எதிர்கொள்வதற்குப் பொருத்தமான உளநலச் சூழலை ஏற்படுத்தல்.

### 4.19.2. வருடாந்த செயற்சாதனைகள்

- பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வேலைத்திட்டங்களை பாடசாலை முறைமையில் பலப்படுத்துவதற்காகப் புதிய சுற்றறிக்கையினைத் தயாரித்தல்.
- 100 பாடசாலைகளில் ஆலோசனை அலகுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
- 110 ஆசிரிய ஆலோசகர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு ஆசிரிய ஆலோசகர்களின் திறமைகள் விருத்தி செய்யப்பட்டுள்ளன.
- 135 ஆசிரிய ஆலோசகர்களை வலுவூட்டல்.
- 160 தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்களுக்கு சகல வலயங்களுக்கும் உரியதாகப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.
- 157 அதிபர்களுக்கு ஆலோசனை தொடர்பாக அறிவுறுத்தல்.
- நாம் காப்போம் சிறுவர் பாதுகாப்பு வேலைத்திட்டம் மற்றும் பாடசாலைகளில் பாதுகாப்பு மிகுந்த சூழலை உருவாக்கும் வேலைத்திட்டங்களுக்காக 150 பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளித்தல். 3800 அதிபர்கள், 75,000 மாணவர்கள் மற்றும் சுமார் 150,000 பெற்றோர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
- பாடசாலை ஒழுக்க விழுமிய வழிகாட்டல் கோவையினை வகுத்தல்.
- ஊவா, சப்ரகமுவ, இரத்தினபுரி ஆகிய மாகாணங்களில் தோட்டப் பாடசாலைகள் சார்ந்த 117 ஆசிரியர்கள் மனோவியல் சமூக வேலைத்திட்டங்களுக்காக புதிய மூன்று மொடியுல்களின் கீழ் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.
- மனோவியல் சமூக நலனுக்காக தேசிய வழிகாட்டல் கோவையினைத் தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- தென் மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 பாடசாலைகளுக்காக விசேட தொழில் முயற்சி மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஆலோசனை வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.

*2012 வருடாந்த நிதி முதலீடு ரூ. 5.7*

## 4.20 பாட இணைச் செயற்பாடுகள்

### 4.20.1 நோக்கம் மற்றும் இலக்கு

- மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.
- அவர்களின் இரசனையை விருத்தி செய்தல்.
- ஒழுக்க விழுமிய மற்றும் சமூகத்துக்கு உகந்த மாணவர் பரம்பரையை உருவாக்குதல்.
- சமூகத்துக்கு உகந்த சுகாதார வளமிக்க மாணவர் சமூகத்தை உருவாக்குதல்.
- மாணவர்களின் தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்தல்.

### 4.20.2 வருடாந்த செயற்சாதனைகள்

- அகில இலங்கை பாடசாலை டவர்கோல் நாடகப் போட்டித் தொடரின் மாகாணப் போட்டிச் சுற்று நடாத்தப்பட்டது.
- 100வது சாரணர் ஜம்போரியம் மற்றும் 95வது சாரணர் ஜம்போரியத்தை நடாத்துதல்.
- புதிய 50 சுகாதார வழுங்கல் பிரிவுகளை ஆரம்பித்தல் மற்றும் 250 ஆசிரியர்களுக்காக முதலுதவிப் பயிற்சிகளை வழங்குதல்.
- புனித ஜோன் கீட்டி 200 பிரிவுகளை புதிதாக ஆரம்பித்தல், பிரிவுகளுக்குப் பொறுப்பான 200 ஆசிரியர்களுக்காக முதலுதவிப் பயிற்சிகளை வழங்குதல்.
- கீட்டி மற்றும் கெடட் தேசிய முகாம்களை நடாத்துவதற்குரிய உதவிகளை வழங்குதல், புதிதாக 100 பிரிவுகளை ஆரம்பிப்பதற்காக ஆசிரிய பயிற்சிகளை வழங்குதல்.
- இளைஞர் விவகார தேர்ச்சி அபிவிருத்தி அமைச்சின் எம்பிலிப்பிட்டிய தலைமைத்துவப் பயிற்சி மத்திய நிலையத்தின் பயிற்சி வேலைத்திட்டங்களுக்காக மாணவத் தலைவர்களை ஈடுபடுத்தல்.
- மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியின் உயர்தர புதிய மாணவர்களுக்காக தலைமைத்துவப் பயிற்சியினை வழங்க ரன்டபே தேசிய மாணவர் படையணி பயிற்சி மத்திய நிலையத்தில் நடாத்த மற்றும் தேசிய மாணவர் அணியினை மதிப்பீட்டுக் குழுவில் மாணவர் அணியினைப் பங்கேற்கச் செய்தல்.
- ஜனாதிபதி விருது வழங்கும் தேசிய விழா ரண்டபே தேசிய மாணவர்அணி தேசிய பயிற்சி மத்திய நிலையத்தில் நடாத்துவதற்குரிய உதவிகளை வழங்குதல்.

*2012 நிதி ஒதுக்கீடு 4.7*

## 4.21 போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டங்கள்

### 4.21.1 நோக்கம் மற்றும் இலக்கு

- போதைப்பொருள் பயன்பாட்டின் முன்னேற்றங்கள் தொடர்பான அறிவினை விருத்தி செய்தல்.
- போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக மாணவர்களை அறிவுறுத்தல்

### 4.21.2 வருடாந்த செயற்சாதனைகள்

- அல்கம மகா வித்தியாலயத்தில் தலைமைத்துவ விருத்திச் செயலமர்வு மற்றும் கலவான ஆந்த தேசிய பாடசாலை மாணவர் செயலமர்வு மற்றும் விசேட போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- சர்வதேச போதைப்பொருள் ஆக்கப் போட்டித் தொடரினை நடாத்திப் பரிசில்களை வழங்குதல்.
- பாடசாலை வளாகத்தில் போதைப்பொருள் மற்றும் ஏனைய மதுப் பயன்பாடற்ற வலயமாக மாற்றியமைப்பதற்கு இலக்கம் 28/2012 கொண்ட சுற்றறிக்கையை 2012.08.30 ஆந் திகதி வழங்குதல்.

# 5. மனிதவள அபிவிருத்தி

## 5.1 இலங்கை ஆசிரிய சேவை

**5.1.1 அட்டவணை : ஆசிரிய சேவைக்காகச் சேர்த்துக்கொள்ளல் 2005-2012**

| ஆண்டு | கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட ஆசிரியர் நியமனங்கள் | | | | மாகாண சபைகளினால் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் நியமனங்கள் |
|---|---|---|---|---|---|
| | தேசிய பாடசாலைகளுக்காக ஆசிரியர் நியமனம் | | மாகாணப் பாடசாலைகளுக்காக ஆசிரிய நியமனம் | | |
| | பட்டதாரி | கல்விக் கல்லூரி | பட்டதாரி | கல்விக் கல்லூரி | |
| 2005 | 2,923 | 383 | 326 | 2,326 | 1,925 |
| 2006 | 2,444 | 887 | 960 | 2,451 | 2,960 |
| 2007 | 0 | 408 | 1,490 | 2,191 | 967 |
| 2008 | 0 | 427 | 671 | 2,191 | 3,070 |
| 2009 | 971 | 1,307 | 0 | 1,613 | 1,498 |
| 2010 | 584 | 829 | 132 | 2,078 | 2,368 |
| 2011 | 1,090 | 1,090 | 2,198 | 1,553 | 2,145 |
| 2012 | 1,000 | 817 | 2,370 | 1,489 | 2,370 |
| එකතුව | 9,012 | 6,148 | 8,147 | 15,892 | 17,303 |

5.1.2 அட்டவணை : ஆசிரிய சேவைக்காகச் சேர்த்துக் கொள்ளல்

| | |
|---|---|
| 2005-2012 வரை ஆசிரிய சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளின் எண்ணிக்கை | 34,462 |
| 2005-2012 வரை ஆசிரிய சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட கல்விக் கல்லூரி டிப்ளோமாதாரிகளின் எண்ணிக்கை | 22,040 |
| 2005-2012 வரை ஆசிரிய சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொத்த எண்ணிக்கை | 56,502 |

## 5.1.2 ஆசிரிய கல்வி மற்றும் ஆசிரிய பயிற்சிகள்

தேசிய கல்விக் கல்லூரி, ஆசிரிய கல்லூரி மற்றும் ஆசிரிய மத்திய நிலையங்கள் இலங்கையின் ஆசிரிய கல்விக்காக மற்றும் ஆசிரிய பயிற்சிக் கேந்திர நிலையங்களாகக் காணப்படுகின்றன.

### தேசிய கல்விக் கல்லூரி

18 தேசிய கல்விக் கல்லூரிகள் காணப்படுவதுடன் அதில் 17 ஆரம்ப சேவை ஆசிரிய பயிற்சியினை வழங்கும் முறைமைக்குத் தேவையான பல்வகைப் பாடங்களுக்குரிய போதனாவியல் டிப்ளோமாதாரர்களை உருவாக்குகின்றது. பேராதனை தேசிய கல்விக் கல்லூரியின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஆங்கில ஆசிரியர்களின் ஆங்கில மொழிப் பயிற்சிக்காக விசேடமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஆசிரிய கல்லூரி

நாட்டில் 9 ஆசிரிய கல்லூரிகள் காணப்படுவதுடன் இதில் சேவைக்கால ஆசிரிய பயிற்சியினைப் போன்று பயிற்றப்படாத ஆசிரியர் பயிற்சியும் மேற்கொள்ளப்படுகின்றது.

### ஆசிரிய மத்திய நிலையம்

நாடெங்கும் அமைந்துள்ள 104 ஆசிரியர் பயிற்சி மத்திய நிலையங்கள் மூலம் முறைமையில் உள்ள ஆசிரியர்களின் தொடர்ச்சியான ஆசிரிய பயிற்சி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

**வருடாந்த செயற்சாதனை**

- பயிற்றப்படாத 360 பட்டதாரிகளுக்காக பயிற்சிக்கான சந்தர்ப்பத்தினை வழங்குதல்.
- 3100 ஆசிரிய மாணவர்கள் தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்ளல்
- சிறுவர் நட்புறவுப் பாடசாலைப் பிரவேசம் தொடர்பாக இலத்திரனியல் செயற்பாட்டுத் தொகுதிகளை ஆசிரிய மாணவர்களுக்கு வழங்குதல்.
- ஐந்து வருடங்களுக்குப் பின்னர் தேசிய போதனாவியல் வழங்கும் விழாவினை நடாத்துதல்.

- 2013 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரிய அடிப்படை வேலைத்திட்டங்களை தேர்ந்தெடுக்கப்பட்ட 23 வலயங்களில் அமுல்படுத்துவதற்காக உரிய தரப்பினரை அமுல்படுத்தல் மற்றும் கையேடு உட்பட சுற்றறிக்கைகளைத் தயாரித்தல்.
- அரச பாடசாலைகள், பிரிவெனாக்கள், தனியார் பாடசாலைகளில் பயிற்றப்படாத 1488 ஆசிரியர்கள் மற்றும் 2012/2013 கல்வி ஆண்டுக்குரிய ஆசிரிய கல்லூரிகளுக்குச் சேர்த்துக்கொள்ளல்.
- 2010/2011 தொலைக்கல்வி ஆசிரிய பயிற்சியினைத் தொடர்ந்த 2500 ஆசிரிய மாணவர்களுக்கு பிரயோகப் பயிற்சிக்காக பாடசாலைகளுக்கு இணைப்புச் செய்தல் மற்றும் இறுதிப்ப ரீட்சைகளை நடாத்துதல்.
- இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பினை மறுசீரமைத்து அரச சேவை ஆணைக்குழுச் சபைக்கு அங்கீகாரத்திற்கு அனுப்புதல்.

## 5.2 இலங்கை அதிபர் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளல்

- III ஆம் வகுப்பின் 1759 வெற்றிடங்களில் 1010 வெற்றிடங்களை நிரப்புவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- 2 - II வகுப்புக்காக மிகை ஊழியர் சேவை அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ள 2767 பேர்கள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டனர்.
- சிரேஷ்ட மற்றும் திறமை அடிப்படையில் 3429 பேர்கள் 2-I வகுப்புக்கு பதவியுயர்த்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- மட்டுப்படுத்தப்பட்ட சிரேஷ்ட மற்றும் திறமை அடிப்படையில் 395 பேர்களை 1 ஆம் வகுப்புக்குப் பதவியுயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள.
- தேசிய பாடசாலை அதிபர் பதவியில் 105 இனை நிரப்புவதற்காக விண்ணப்பம் கோரல்
- இலங்கை அதிபர் சேவை பிரமாணக்குறிப்பினை மாகாணங்களின் பரிந்துரையுடன் சம்பள மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணைக்குழுச் சபைக்கு அனுப்புதல்

## 5.3 இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளல்

- III வகுப்பின் வெற்றிடங்களில் 272 ஐ நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரல்.
- 2 - II வகுப்புக்கு 241 பேர்களும், 2 - I வகுப்புக்கு 14 பேர்களையும் பதவியுயர்த்துவதற்காக வர்த்தமானி அறிவித்தலை அரச சேவை ஆணைக்குழுச் சபையின் அங்கீகாரத்திற்காக அனுப்புதல்..
- 2 - I வகுப்புக்கு 40 பேர்களைப் பதவியுயர்த்துவதற்காக விண்ணப்பம் கோரல்.
- இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் பிரமாணக் குறிப்பினைச் சீர்திருத்த அரச சேவை ஆணைக்குழுச் சபையின் அங்கீகாரத்திற்கு அனுப்புதல்.

## 5.4 இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குச் சேர்த்துக்கொள்ளல்

- மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு அமைய 185 வெற்றிடங்களின் 147 இற்காக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள அரச சேவை ஆணைக்குழுச் சபையின் அங்கீகாரம் அனுப்பப்பட்டுள்ளது.
- சிரேஷ்ட மற்றும் திறமை அடிப்படையில் 122 வெற்றிடங்களில் 108 இற்காக நியமனம் வழங்குதல்.
- திறந்த போட்டிப் பரீட்சைக்கு அமைய III ஆம் வகுப்பின் 103 வெற்றிடங்களில் 42 இற்காக சேர்த்துக்கொள்ளல்.
- 2011.01.01 ஆந் திகதி இடம்பெற்ற 1ம் வகுப்பின் 8 வெற்றிடங்களுக்காகப் பதவியுயர்வு வழங்குதல்.
- 2012.01.01 ஆந் திகதியன்று இடம்பெற்ற 1ம் வகுப்பின் 24 வெற்றிடங்களுக்காக பதவியுயர்வு வழங்க அரச சேவை ஆணைக்குழுச் சபைக்கு அங்கீகாரத்திற்காக அனுப்புதல்.
- இலங்கை கல்வி நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பினை மறுசீரமைத்து அரச சேவை ஆணைக்குழுச் சபையின் அங்கீகாரத்திற்காக அனுப்புதல்.
- திறந்த போட்டிப் பரீட்சையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 111 ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

## 5.5 பல்வேறுபட்ட பயிற்சி வேலைத்திட்டங்கள்

### 5.5.1 இலக்கு

- சகல உத்தியோகத்தர்களினதும் தொழில்சார் விருத்தி.
- வலயக் கல்வி அலுவலகங்களின் நிர்வாகப் பிரிவாகவும், கோட்டக் கல்வி அலுவலகங்களின் கற்கை அபிவிருத்திப் பிரிவாகவும் பலப்படுத்தல்.
- அதிபர்களின் தலைமைத்தவ மற்றும் முகாமைத்துவ இயலுமைகளை விருத்தி செய்தல்.

### 5.5.2 செயற்சாதனைகள்

- அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வேலைத்திட்டங்களுக்காக ஈடுபடுத்தல்.
- அபிவிருத்தி உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர், சமமான சேவைகளில் உள்ள 265 உத்தியோகத்தர்களுக்காக தொழிற்பயிற்சி

வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

- தமிழ் மொழிப் பாடநெறிக்காக 80 உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தல்.

- 1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் 69 அதிபர்களுக்காக தலைமைத்துவ அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

- கல்வி அமைச்சின் 106 அலுவலக உதவியாளர்களுக்காக பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

# 6. பௌதீகவள விருத்தி

## 6.1 நோக்கு மற்றும் இலக்கு

- தேசிய பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளின் கற்றல் உபகரணத் தேவையினை வகுத்தல்.
- வெளிநாட்டு நன்கொடையாகக் கிடைக்கும் விசேட புத்தகங்களை நாட்டின் சகல பாடசாலைகளுக்கும் வழங்குதல்.
- பிரிவெனா மற்றும் முறைசாராக் கல்வி நிறுவனங்களுக்கு உபகரணங்களை வழங்குதல்.
- ஊழியர்களின் வினைத்திறன் விருத்திக்காக இசுருபாய அலுவலக வளாகத்தை கவர்ச்சிகரமான முறையில் நவீன மயப்படுத்தல்.
- பாடசாலைகளுக்குத் தேவையான பௌதீக வசதிகளை விருத்தி செய்வதற்கான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மிகுந்த வினைத்திறனாக்குதல்.
- பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து ஆரம்பப் பாடசாலைகளை சிறுவர் நட்புறவுப் பாடசாலைகளாக அபிவிருத்தி செய்தல்.
- ஜனாதிபதி அலுவலகத்துடன் இணைந்து மூடப்படக் கூடிய சிறு பாடசாலைகளைக் கட்டியெழுப்புதல்.

6.1 அட்டவணை : கட்டிட நிர்மாணிப்பு மற்றும் சுத்திகரிப்பு வசதிகளை வழங்குதல்

| *நிர்மாண விபரங்கள்* | *மூதலீடு ரூ.மி.* |
|---|---|
| ஆரம்பப் பாடசாலை அபிவிருத்தி மற்றும் புதிய நிர்மாணிப்புக்கள் | 60.1 |
| புதிய மாதிரி ஆரம்பப் பாடசாலைச் செயற்றிட்டம் | 24.0 |
| இடைநிலைப் பாடசாலைகளை நவீன மயப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி | 305.1 |
| தேசிய பாடசாலை அபிவிருத்தி | 279.9 |
| 1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் | 792.4 |
| கணினி ஆய்வுகூட நிர்மாணிப்பு மற்றும் பழுதுபார்ப்பு | 172.0 |
| லீட் செயற்றிட்ட பாடசாலை அபிவிருத்தி | 42.3 |
| பாதுகாப்பு சேவைக் கல்லூரிகளின் நிர்மாணிப்பு மற்றும் பழுதுபார்ப்பு | 200.9 |
| ஆங்கில வள மத்திய நிலைய நிர்மாணிப்பு (RESC) | 24.6 |
| முறைசாராப் பாடசாலைப் பிள்ளைகளுக்காக வகுப்பறை நிர்மாணிப்பு | 6.5 |
| பாடசாலைகளில் நீர் மற்றும் சுத்திகரிப்பு வசதிகளை வழங்குதல் | 150.0 |
| ஆசிரிய கல்லூரி மற்றும் ஆசிரிய மத்திய நிலையங்களின் புதிய நிர்மாணிப்பு | 26.5 |
| தேசிய கல்விக் கல்லூரிகளின் நிர்மாணிப்பு மற்றும் புனரமைப்பு | 52.7 |
| EKSP—ADB செயற்றிட்டத்தின் கீழ் நிர்மாணிப்பு மற்றும் புனரமைப்பு | 838.3 |
| உலக வங்கி உதவியின் கீழ் நிர்மாணிப்பு மற்றும் புனரமைப்பு | 157.7 |
| KOICA உதவித் திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பு மற்றும் பழுதுபாப்ப்பு | 3.4 |
| யுனிசெப் உதவியின் கீழ் நீர் மற்றும் சுத்திகரிப்பு வசதிகள் | 124.4 |
| சேவ் த சில்றன் மற்றும் பொதுநலவாய சபை வேலைத்திட்டங்கள் | 3.6 |
| கல்வி அமைச்சின் அபிவிருத்திகள் | 75.2 |
| **மொத்தம்** | **3,339.6** |

6.2 அட்டவணை : தளபாட உபகரணங்கள்மற்றும் பண்புசார் உள்ளீட்டு வழங்கல்

| *2012 ஆம் ஆண்டின் பொருட்கள் மற்றும் சேவைப் பெறுகை* | *மூதலீடு ரூ.மி.* |
|---|---|
| ஆரம்பப் பாடசாலைகளுக்கான தளபாட உபகரணங்களை வழங்குதல் | 13.5 |
| புதிய மாதிரி ஆரம்பப் பாடசாலைகளுக்காக தளபாட உபகரணங்களை வழங்குதல் | 27.3 |
| ஆரம்ப அழகியற் கலை உபகரணங்கள் | 15.5 |
| ஆரம்ப கணித உபகரணங்கள் | 2.9 |
| ஆரம்ப விளையாட்டு உபகரணங்கள் | 4.3 |
| இடைநிலைப் பாடசாலைகளுக்காக தளபாட உபகரணங்கள் | 42.9 |
| தொழில்நுட்பக் கல்வி 8 வகையான உபகரணங்கள் 89 பாடசாலைகளுக்காக | 4.4 |
| 35 அழகியல் கலை உபகரணங்கள் 178 பாடசாலைகளுக்காக | 14.9 |
| 32 வகையான விளையாட்டு உபகரணங்கள் 252 பாடசாலைகளுக்காக | 14.0 |
| 166 விஞ்ஞான உபகரண வகைகள் மற்றும் 58 இரசாயன பொருட்கள் சகல பாடசாலைகளுக்கும் | 22.9 |
| கணினி மற்றும் உதிரிப்பாகங்கள் | 67.3 |
| மொழியியல் உபகரணங்கள் | 1.2 |
| லீட் செயற்றிட்டப் பாடசாலைகளுக்காக உபகரணங்கள் | 32.4 |
| வாழ்க்கைத் தேர்ச்சிக்காக ஆங்கில வேலைத்திட்டம் | 44.7 |
| விசேட கல்வி உபகரணங்கள் | 9.0 |
| பிரிவெனாக்களுக்கான புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் | 5.3 |
| ஆசிரிய கல்லூரிகள் மற்றும் கல்விக் கல்லூரிகளுக்காக | 30.8 |
| EKSP செயற்றிட்டத்தின் கீழ் உபகரணங்களை வழங்குதல் | 184.2 |
| உலக வங்கி உதவியின் கீழ் உபகரணங்களை வழங்குதல் | 16.2 |
| அமைச்சுக்கான பல்வகைச் சேவைகள் | 12.2 |
| **மொத்தம்** | **553.7** |
| 255 பியானோக்கள் மற்றும் 3200 கிரீன் போட் பாடசாலைகளுக்காக | ரூபா 800 மில்லியன் பெறுமதியான கொரிய நன்கொடை |
| 180 கணினிகள் பாடசாலைகளுக்காக | ரூபா 15 மில்லியன் பெறுமதியான கொரிய மற்றும் ஜப்பான் நன்கொடை |

# 7. பயன்மிக்க சேவைகளை வழங்குவதனைப் பலப்படுத்தல் மற்றும் செயற்சாதனை மதிப்பீடு

## 7.1 தேசிய கல்விக் கொள்கையினை அமுல்படுத்தல் மற்றும் மாகாண சபையுடன் இணைப்புக்களை மேற்கொள்ளல்

### 7.1.1 புதிய தேசிய கல்விக் கொள்கை

தேசிய கல்வியின் எதிர்காலப் பயணத்தினை உறுதி செய்யும் வகையில் உள்நாட்டு உயர் கலாச்சாரப் பண்புகளை எதிர்கால சந்ததியினருக்கு வழங்கி பொருளாதார, சமூக மற்றும் கோளமய நெகிழ்வுத் தன்மையினை தழுவக் கூடியவாறு நீடித்த நிரந்தர கல்விக் கொள்கைக் கோட்பாடு தயாரிக்கப்பட்டுப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

### 7.1.2 கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் இணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வுச் செயற்பாடுகளைப் பலப்படுத்தல்

கல்வி பண்புசார் விருத்தியின் முடிவுறா இலக்காகக் கருதி பண்புசார் விருத்தியினை உறுதி செய்யும் வகையில் சகல மட்டங்களிலும் அமுல்படுத்தப்படும் கல்வி வேலைத்திட்டங்களை தொடர்ச்சியாக கிரமமாக மேற்பார்வை செய்வதற்காக குறுகிய பிரவேசத்துடன் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- மாதாந்த உள்ளக மீளாய்வுக் கூட்டம்
- மாகாண உத்தியோகத்தர்களுடன் நடைபெறும் இரு மாதகால கல்விக்குழுக் கூட்டம்
- கௌரவ அமைச்சரின் தலைமையில் கௌரவ மாகாணக் கல்வி அமைச்சருடன் நடாத்தப்படும் மாதாந்தக் கூட்டம்
- தேசிய பாடசாலை அதிபர் கூட்டம்
- வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் நடைபெறும் கூட்டம்

### 7.1.3 ஆசிரிய இடமாற்றக் கொள்கையினை அமுல்படுத்தல்

- 20 வருடத்தினைத் தாண்டிய ஒரு பாடசாலையில் சேவையாற்றி தேசிய பாடசாலையில் 1500 ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுத்தல்.
- தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்கிடையே ஆசிரியர்களை சமநிலைப்படுத்தக் கூடியவாறு தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கையினை வகுப்பதற்காக கௌரவ கல்வி அமைச்சர் உள்ளிட்ட தரப்பினரின் கருத்துக்களைப் பெறல்.

### 7.1.4 மஹிந்தோதய கல்வி அபிவிருத்தி மாதம் - 2012 ஒக்டோபர்

அமுலிலுள்ள கல்விப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் புதிய அபிவிருத்திப் பிரவேசத்தின் ஊடாக செயற்திறனை மேம்படுத்துவதற்காக பாடசாலைகள், வலய, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் விசேட வேலைத்திட்டங்களை அமுல்படுத்தும் 31 நாட்களுக்கும் 2012 ஒக்டோபர் மாதம் மஹிந்தோதய அபிவிருத்தி மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது

### 7.1.5 பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திக்காக பாடசாலைகளை வலுவூட்டல்

பாடசாலைத் திட்டமிடல், நிதியாக்கம், பெறுகை தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தினை பாடசாலை மட்டத்திற்கு விடுவிப்பதற்கு மற்றும் அதன் மூலம் பாடசாலையின் பொறுப்புக்கள் மற்றும் சேவையினை வழங்குவதனைப் பலப்படுத்துவது கல்வி அமைச்சின் புதிய கொள்கைகளுக்கிடையே பிரதானமானதாகும். இதற்காக பாடசாலை நிதிச் சுற்றறிக்கைகள் மற்றும் ஆலோசனைக் கோவைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் முதற்கட்ட நடவடிக்கையாக தேர்ந்தெடுக்கப்படும் பாடசாலைகளுக்கு அவற்றின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கற்றல் ஊக்குவிப்பு வழங்கல்களை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### 7.1.6 பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர்களைச் சேர்த்தக்கொள்ளல்

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்ளும் முறைகளுக்கு அமைய 1000 இடைநிலைப் பாடசாலைகளுக்காக பட்டதாரி ஆசிரியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இம்முறைக்கமைய நியமனம் பெற்ற பாடசாலைகளில் உரிய காலம் சேவையாற்றுவது கட்டாயம் என்பதுடன் இதனால் வசதிமிக்க பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் பல்வேறுபட்ட முறைகளில் இடமாற்றங்களைப் பெற்றுக் கொள்வது தவிர்க்கப்பட்டுள்ளது.

## 7.2 வெளிநாட்டு ஒத்துழைப்பு மற்றும் தனியார் துறையின் ஒத்துழைப்பின் மூலம் பண்புசார் பிரவேசத்தின் மீதான ஈடுபாடு

### 7.2.1 தெற்காசியாவின் பிராந்திய ஆசிரிய கல்வி அபிவிருத்தி மத்திய நிலையம்

2012 ஒக்டோபர் 09 ஆந் திகதி மீபே புதிய தெற்காசிய வலய ஆசிரிய மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. யுனெஸ்கோ அமைப்பு உள்ளிட்ட வெளிநாட்டு அமைப்புக்கள் ஆசிரிய பயிற்சி உட்பட அதனுடன் இணைந்த கொள்கை விருத்தி, ஆராய்ச்சிப் பிரவேசங்களை வலுப்படுத்துவதன் மூலம் அதியுயரிய பண்புசார் விருத்தியுடன் ஆசிரியர்களை வலய ரீதியில் ஏற்படுத்துவதற்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது.

இவ்விசேட நோக்கங்களிற்காக 2012.10.09 ஆந் திகதி ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைதீவு, இந்தியா, நேபாளம் ஆகிய வலயங்களின் கல்வி அமைச்சர்கள், கல்வி உத்தியோகத்தர்கள், யுனெஸ்கோ போன்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் இம்மத்திய நிலையத்தின் அங்குரார்ப்பண பிரவேசம் உருவாக்கப்பட்டது.

### 7.2.2 நெனச தொலைக்காட்சி கல்வி வேலைத்திட்டம்

ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவுள்ள கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளின் பிள்ளைகளுக்கு விசேடமாக விஞ்ஞானம், கணிதம், தாய்மொழி மற்றும் இரண்டாம் மொழிக்காக கற்றலுக்கான சந்தர்ப்பங்களை வகுப்பதற்கு நெனச கல்வி தொலைக்காட்சி வேலைத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் மற்றும் டயலொக் நிறுவனத்துடன் இணைந்து உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதற்கமைய ஏற்கனவே சுமார் 900 பாடசாலைகளில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.

### 7.2.3 இணையப் பாடசாலை வேலைத்திட்டங்கள்

இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம், எடிசலாட் கம்பனியுடன் இணைந்து கல்வி அமைச்சுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள புரிந்துணர்வுக்கு அமைய இலங்கையின் பாடசாலைகளுக்காக கணினி வசதிகள் மற்றும் இணையத்தள வசதிகளை வழங்குவதற்கும், பாடவிதானத்திற்குரிய மென்பொருள் இணையத்தளங்களைக் கற்பதற்கும் சந்தர்ப்பம் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 7.2.4 கணினி வசதிகளை வழங்குதல்

கொரிய குடியரசின் உவன்சு மொட்ரோபொலிட்டன் கல்வி நிறுவகம், கொரிய கல்வி விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சும், இலங்கைக் கல்வி அமைச்சும் இணைந்து கைச்சாத்திட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய 50 கணினிகள் மஹிந்த ராஜபக்ஷ கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 7.2.5 பியானோ மற்றும் கிரீன்போட் நன்கொடையாக வழங்குதல்

கொரிய அரசாங்கம் மற்றும் இலங்கை அரசுக்கிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய 3000 இலத்திரனியல் பியானோக்களை பாடசாலைகளுக்கு விநியோகிப்பதற்காக கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கிரீன்போட் வகையின் விசேடமாக 30,000 கரும்பலகைகளும், கொரிய கொடை வள்ளல்களின் தனிப்பட்ட வழங்கலாக நாட்டுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்நன்கொடைகள் சுமார் 1000 மில்லியன் ரூபா பெறுமதியானது.

### 7.2.6 ஆக்கத்தின் மிக்க ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான மென்பொருள் போட்டி - மைக்ரோசொப் ஒத்துழைப்பு

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே புத்தாக்க தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சியினை மேம்படுத்தும் நோக்குடன் மைக்குரோசொப்ட் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இம்மென்பொருள் போட்டி நடாத்தப்பட்டு விருதுகள் வழங்கப்படுகின்றன.

### 7.2.7 இன்டெல் ஒத்துழைப்பு வேலைத்திட்டம்

பாடசாலை மாணவர்களுக்கிடையே புத்தாக்கங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் சர்வதேசப் போட்டினை நடாத்துவதற்காக இலங்கை விஞ்ஞான மற்றும் பொறியியல் விற்பனைக் கூடங்கள் உட்பட கண்காட்சிகள் தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் இலங்கைப் பொறியியல் நிறுவகத்துடன் இணைந்து இன்டெல் கம்பனியினால் நடாத்தப்படுகின்றது.

School.lk இணையத்தளம் ஊடாக மாணவர்களுக்கு மற்றும் ஆசிரியர்களுக்கு கற்கை வழங்களுக்குப் பிரவேசிக்கவும், வழங்களை உருவாக்குவதற்காக இன்டெல் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## 7.3 அமைச்சின் புதிய அபிவிருத்திப் பிரவேசம்

### 7.3.1 கல்வி அமைச்சின் தேசிய செயற்பாட்டு அறையினைச் செயற்படுத்தல் (National Operations Room)

தேசிய பிரச்சினைகளை துரிதகதியில் இனங்கண்டு செயற்படுத்துவதற்காக புதிய தேசிய செயற்பாட்டுப் பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது கீழ்க்குறிப்பிடப்பட்ட 5 நோக்கங்களுக்கு அமைய அமுல்படுத்தப்பட்டுள்ளது.

- பொதுக் கல்வித்துறையின் பிரவேசத்திற்கு உரியதான அடிப்படை மற்றும் பிரதான தகவல்களை சமகாலப்படுத்துவதற்கான விரிவான பயன்பாட்டிற்கான இணைப்பினை உறுதிப்படுத்தல்.
- ஊடக தகவல்களை மூலமாகப் பயன்படுத்துவதற்கும், ஒரு துறையின் பிரச்சினையை துரிதகதியில் தீர்ப்பதற்காகப் பயன்படுத்துவதற்கான இயலுமையினை விரிவுபடுத்துவதற்கும்.
- நவீன தொழிநுட்பப் பிரவேசங்கள் ஊடாக

துரிதகதியில் தகவல்களைப் பெற்று அவற்றை அதிசிறந்த தீர்மானங்களுக்காக ஈடுபடுத்துவதற்கான பிரவேசத்தினை உருவாக்குதல்.

- கல்வி அபிவிருத்தியினை உறுதிப்படுத்தும் அறிக்கையினை வகுப்பதனை விரிவான மற்றும் பயன்மிக்கதாக மாற்றியமைத்தல்.
- உள்நாட்டு வெளிநாட்டு தூதுக்குழுவினருக்காக கல்வி அமைச்சுக்குரிய பிரதான தகவல்களுக்கு நவீன முறைகள் ஊடாக எட்டக்கூடிய இயலுமைகளை விருத்தி செய்தல்.

இதற்காக தகவல் ஊடகம், தொலைபேசி, மின்னஞ்சல், பெக்ஸ் ஆவணங்கள் உட்பட சகல வியூகங்களும் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் 1988 அவசர அழைப்பு இலக்கத்தின் ஊடாக நேரடியாகத் தொடர்புகொள்ளும் வசதிகளும் சமூகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

### 7.3.2 உற்பத்தித்திறன் விருத்தி வேலைத்திட்டம்

2012 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சில் உற்பத்தித் திறன் செயற்பாட்டுப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இச்செயற்பாட்டுப் பிரிவில் அமைச்சின் பிரதான ஐந்து பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய வகையில் 30 உத்தியோகத்தர்களைக் கொண்ட உற்பத்தித்திறன் ஊக்குவிப்புக் குழு தாபிக்கப்பட்டுள்ளது. உற்பத்தித்திறன் ஊக்குவிப்புக்குழு ஊடாக இவ்வமைச்சின் சகல பிரிவுகளினதும் உற்பத்தித்திறனை விருத்தி செய்து கல்வி அமைச்சினை அதிசிறந்த வினைத்திறன் மிக்க அமைச்சாக மாற்றியமைப்பதற்கான பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

### 7.3.3 e-pension செயற்றிட்டத்தை அமுல்படுத்தல்

- ஓய்வுபெற்றுச் செல்லும் உத்தியோகத்தர்களுக்காக அன்றைய தினமே பணிக்கொடைக் கொடுப்பனவுகளைச் செலுத்தக் கூடியவாறு ஓய்வூதிய சம்பளத் திணைக்களத்துடன் இணைந்து e-pension செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## 7.4 செயற்சாதனை மதிப்பீடுகள்

### 7.4.1 மாணவர் கற்கை அடைவு மட்டம் தொடர்பான தேசிய மதிப்பீட்டு வேலைத்திட்டம்

2012 ஆம் ஆண்டின் எட்டாம் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் கற்றல் அடைவுமட்ட மதிப்பீட்டிற்காக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் NEREC நிறுவனத்துடன் இணைந்து தேசிய மதிப்பீட்டு வேலைத்திட்டங்களை நடாத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 7.4.2 பாடசாலை மற்றும் கல்வி நிறுவனங்களின் மதிப்பீட்டுச் செயற்பாடுகள்

- 51 தேசிய பாடசாலைகளின் வெளி மதிப்பீட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- 5 தேசிய பாடசாலைகளின் மீளூட்டல் வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
- தேசிய கல்வி நிறுவகம் மற்றும் ஆசிரிய கல்வி நிறுவகங்களுக்காக தர, ஒப்பளவுகள் மற்றும் காட்டிகளை வகுத்து ஒரு கல்விக் கல்லூரியின் வெளி மதிப்பீட்டு வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்.
- பாடசாலையின் வெளி மதிப்பீட்டுப் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான கையேட்டினை வகுத்தல்.
- சகல வலயக் கல்வி அலுவலகங்களிலும் பண்புசார் கல்வியினை உறுதிப்படுத்தும் வகையில் அதனை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டுப் பட்டியல்களை வகுத்து இரு வலயக் கல்வி அலுவலகங்களின் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

### 7.4.3 கல்வி ஆராய்ச்சிச் செயற்பாடுகளை விருத்தி செய்தல்

- தேசிய கல்வி நிறுவகத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்து மாகாணங்களின் ஆராய்ச்சிச் செயற்பாடுகளை விருத்தி செய்தல்
- 2009 ஆம் ஆண்டு தொடக்கம் அமுலிலுள்ள 'One Laptop per Child' வேலைத்திட்டம் தொடர்பில் தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து 13 பாடசாலைகளின் ஆராய்ச்சிப் புள்ளிவிபரங்களை வெளியிடல்.
- தோட்டப் பாடசாலைகள் தொடர்பான ஆய்வினை மேற்கொள்ளல்
- கல்வி ஆராய்ச்சி இயலுமையினை விருத்தி செய்வதற்காக கல்வி ஆய்வுச் சஞ்சிகையினை வெளியிடல்
- சிறிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து மேற்கொண்ட ஆராய்ச்சிகளை வெளியிடல்.

### 7.4.4 பாடசாலைப் புள்ளிவிபர ஆக்கங்களை விருத்தி செய்தல்

- 2011 வருடாந்த பாடசாலைப் புள்ளிவிபரங்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆசிரிய மாணவர் எண்ணிக்கை உட்பட சகல தகவல்களும் அமைச்சின் புள்ளிவிபர முறைமையில் உள்ளடக்குவதற்காக மற்றும் 2012 ஆம் ஆண்டின் வருடாந்த புள்ளிவிபரங்களை மேற்கொள்ளல்.
- தேசிய மட்டத்தில் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையினை மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் புதிய மென்பொருளுக்கு அமையத் தயாரிக்கும் முதற்கட்ட நடவடிக்கையாக ஆசிரிய தகவல்களை உள்ளடக்குவதனைப் பூர்த்தி செய்தல்.
- 1000 இடைநிலைப் பாடசாலை அபிவிருத்தி வேலைத்திட்டத்துடன் மேற்கொள்ளப்பட்ட கட்டமைக்கப்பட்ட மாற்றங்களுக்கு அமைய பாடசாலை அமைவிடம் தொடர்பான பூகோளவியல் தகவல் முறைமை (GSI) இனைச் சமகாலப்படுத்தல்.
- 2011 புள்ளிவிபரத் தகவல்களை உள்ளடக்கி வெளியிடல்.



அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களினால் ஆசிரிய நியமனம் வழங்கல்...



தெற்காசிய ஆசிரிய பயிற்சி மத்திய நிலையத்தினைத் திறந்து வைத்தல்......



இணையக் கல்லூரி.....



பாடசாலைகளுக்கு தொலைக் கல்விக்காக நெனச விஞ்ஞான உபகரணங்களை விநியோகித்தல்

# 8. நிதி முதலீடு மற்றும் செலவினங்கள் தொடர்பான முன்னேற்றங்கள்

கல்வி அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் செயற்பாட்டு வேலைத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஆகிய பிரதான இரு வேலைத்திட்டங்கள் ஊடாக நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மீண்டெழும் செலவினத்தின் பிரதான 9 துறைகளுக்குரிய செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன் 2012 ஆம் ஆண்டு மீண்டெழும் செலவினமாக ரூபா 27,243 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 11,095 மில்லியன் ஒதுக்கப்பட்டிருப்பது இடைநிலைக் கல்விக்காகும்.

கல்வி அமைச்சின் மூலதனச் செலவினம் மேற்கூறப்பட்ட பிரதான இரு வேலைத்திட்டங்களின் கீழ் 8 செயற்றிட்டங்களுக்காக அமுல்படுத்தப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டின் மொத்த மூலதன ஒதுக்கீடு 6,886 மில்லியன் ஆகும்.

சகல வெளிநாட்டு உதவிகளும் மூலதனச் செலவினமாகக் கணிக்கப்படுவதுடன் அதன் மொத்த தேறிய அளவு 3,925 மில்லியன் ரூபாவாகும்.

நிரல் அமைச்சு மற்றும் மாகாண சபையுடன் இணைந்து மொத்தக் கல்விக்காக மேற்கொள்ளும் செலவினம் வருடாந்தம் அதிகரிக்கப்பட்டுள்ளது.
(8.3.1. படக்குறிப்பு)

மீண்டெழும் செலவினம் 2005 ஆம் ஆண்டுக்கு இணைவாக 2011 ஆம் ஆண்டில் இரட்டிப்பான அதிகரிப்புக் காண்பிக்கப்படுகின்றது.
(8.3.1. படக்குறிப்பு)

## 8.1 கல்வி அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் மீண்டெழும் செலவினங்களின் சுருக்கம்

8.1.1 அட்டவணை : கல்வி அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் மீண்டெழும் செலவினம்

| செயற்றிட்டம் | 2012 மதிப்பீடு ரூ.மி. | தேறிய ஒதுக்கீடு | 2012.12.31 ஆந் திகதியன்று செலவினம் ரூ.மி. |
|---|---|---|---|
| 126-1-1 அமைச்சு அலுவலகம் | 54.15 | 48.70 | 45.47 |
| 126-1-2 நிர்வாகம் மற்றும் தாபன சேவை | 468.40 | 483.98 | 470.45 |
| 126-2-3 ஆரம்பக் கல்வி | 2,662.16 | 2,946.90 | 2,946.39 |
